உ

கடவுள் துணை.

கதிரேசன்பேரில்

ஆனந்தக்களிப்பு.

கதிர்காமத்துயேசல் கதிர்காமக்கும்மி

திருப்பரங்குன்றம் காவடிச்சிந்து மங்களம்.

இவைகளடங்கி யிருக்கின்றன.

இஃது.

மைலம்,

சுப்பிரமணியசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு.

சென்னை,

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

1912

சென்னை ஆச்சாரப்பன்தெரு நெ. 84.

உ

முருகன் துணை.



கதிரேசன்பேரில்

ஆனந்தக்களிப்பு.

காப்பு.

குரு விருத்தம்.

வெத்திமாமயில் வேலவர் மீதினிற்
சித்தியானந்தச் சிந்துபுகழ்ந்திட
சத்திவாலை யருள்திருமாமத
அத்திமாமுக னெங்கரன்காப்பதாம்.

ஆனந்தக்களிப்பு.

தானந் தனா தந்த னானா—தந்த
தானா தனா தந்த னாதந்த னானா

சீர்மேவுங் கதிர்காமம் வாழும்-வள்ளி
தெய்வயானை மணவாளன் மீதிலென்னாளும் ௧

பார்புகழ வேதுதி சிரக்க-எங்கள்
பாரமதை யானைமுகன் றன்னருள்பெருக்க ௨

தானந்த நடனமயிலேறுஞ்-சுவாமி
சரஹண பவானந்தன் மீதிலருள்சேரும் ௩

ஆனந்தக் களிப்பதனைப்பாட-கையிலை
யாளிமல ரடியைநா னனுதினந்தேட ௪

சதுர்முகன் தேவியெந் தரவே-யிந்தத்
தாரணியி லுகந்தகவி வாணர்ஜெயம்பெறவே ௫

கதிர்காம மாநகர் சிறப்பாம்-எங்கள்
கண்ணனரு ளால்சொன்ன ஆனந்தக்களிப்பாம் ௬

திசைமெய்த்த புகழ்கொண்டு நாளும்-நல்ல
செல்வமிகு யாபார தர்மமதுவாழும் ௭

வசியகுல நகரத்தார் தானே-வந்து
வணங்குமெங்கள் கதிரேசன் சன்னதியில்நானே ௮

சொன்னகவி தன்னையரங் கேற்ற-வதனில்
சொற்பிழைகள் வாராம லென்னையுமேகாத்த ௯

நன்னய மிகுந்த தெய்வயானை-யம்மன்
நற்கமல ரடியிணையை நான்துதிப்பேனே ௧௦

அருமறைகள்புகழ்துதிகள் பூணும்-வள்ளி
யம்மையென கவிதனக் கருள்தரவும்வேணும் ௧௧

குருமுனியைப் பணிந்துகவிகூற-அதற்கு
குறைகளொன்றும் வாராமல் சபையிலறங்கேற்ற ௧௨

சீதையால் ராமனு முன்னாலே-வந்து
தெர்ப்ப சயனஞ்செய்த திருப்புல்லாணியிலே ௧௩

நாதனருள் கங்கைகுல சீலன்-தங்கம்
ராம சாமிசொன்ன கவிக்குகந்தவேலன் ௧௪

எச்சரிக்கை யென்றிடும்பன் கூற-வந்து
இருபுறமுங் காவடிகள் நின்றுவிளையாட ௧௫

பச்சைமயி லேறியருள் சீலன்-நித்தியம்
பக்ஷம்வைத் தென்கலி யகற்றும்வடிவேலன் ௧௬

தென்கதிரை மாநகர் விளங்க-வந்த
தேவாதி தேவர்ஜெயங் கூறியேமுழங்க ௧௭

அன்பானசன்னதி யிலங்க-கதிரை
ஆறுமுக வேலருட மாபதிதுலங்க ௧௮

முன்னாலே கோபுர முகப்பும்-எங்கள்
முருகேசன் கோவில்முழுச் செம்பால் வகுப்பும் ௧௯

அன்னமெனும் தெய்வயானை மாடம்-வள்ளியம்மை
    யவள்பக் கமிதனிலே யாடுமேகூடம் ௨0

மூதண்ட யோகபதி யேறும்-கதிரை
    முத்துலிங்க சுவாமியுட சன்னதியைப்பாரும் ௨௧

நாதமொடு கீதமு முழங்க-வசிய
    நகரத்தார் கட்டிவைத்த சத்திரம்விளங்க ௨௨

காணிக்கை கொண்டுவெகு கோடி-ஜனங்கள்
    கதிரேசன் சன்னிதிக்கி வருவார்கள்தேடி ௨௩

மாணிக்க கெங்கைநீராட-இங்கே
    மாதவரும் மனிதர்களும் வந்துகிதங்கூட ௨௪

பொன்னலங் காரநகர் வாசம்-எங்கும்
    புகழ்பெற்ற நவரத்ன மேவிளையுந்தேசம் ௨௫

சொர்னமிகு கதிரைவள மெத்த-தோழி
    சொல்லுகிறேன் நாட்டுவளம் வானுலகுநிகர ௨௬

இந்திரனுட யேவலதினாலே-வந்த
    ஏழுமே கமுமொன்று கூடியேமேலே ௨௭

சந்திரனென வாகவுமே வோங்கி-சத்த
    சாகர மதில்த்தாவி தண்ணீரைவாங்கி ௨௮

மாலென விசும்பிடை படர்ந்து-முகில்கள்
    மண்டியே கெர்ச்சித்து மின்னலுமடர்ந்து ௨௯

நாலுதிசை நாடியே தெளிந்து-கதிரை
    நகர்பூமி யெங்குமழை மாரிகள்பொழிந்து ௩0

ஏரிகுளம் வாவிகள் நிறைந்து-வயல்க
    ளெங்கெங்கு மேநன்னல் செந்நெலும்வளர்ந்து ௩௧

விரிய மிகுந்தமு தத்தின்-நல்ல
    வெண்கமுகு சோலைமலை மேலெங்கும்தோண ௩௨

தனியே பழுத் துதிருமாவும்-அதனில்
    தாவியொரு கொம்பேறே கொக்குகளுமேவும் ௩௩

இனியமலர் வாசனைகள் தேடும்-வீறன்
    திருநீத்து நாலுகால் வண்டினங்கூடும் ௩௪

நாகமது நாகமதிலேறும்-துய்ய
    நாகமேம் புனைந்தசில மாதரையும்பாரும் ௩௫

நாகமலர்சோகுமலர்முல்லை-யிந்த
  காட்டினிலேகலைபகடுக் கொருகொம்புமில்லை ௧௬
முல்லையிருவாட்சிக ளொடுத்து-அந்த
  முல்லையிலேயில்லில்லா மடவார்தொடுத்து ௧௭
வல்லவினை தீரவெனத் தேடி-மாது
  வள்ளிதெய்வயானைக் கிடுவார்கள்கோடி ௧௮
சதுர்மறையும்புகழ்வேத ரிங்கே-வந்து
  தான்வாசஞ்செய்கதிரை மாணிக்ககெங்கை ௧௯
இதிலேநீராடுவது சித்தி-ஜென்மம்
  ஈடேறுஞ்சாயுச்சிய பதவியிலேமுத்தி ௨0
கோலமாமலையழகைப்பாரும்-கதிரை
  குமரேசனருளாலே வல்வினைகள்தீரும் ௨௧
மூலகணபதிக்கிளையவாகன்-கதிரை
  முத்துலிங்கேசருக் கருள்செய்தயோகன் ௨௨
மாமேவும்புலிபுகழுங் தேட்டான்-கதிரை
  மகிமைகளைச்சேடனுலளவிடமாட்டான் ௨௩
பூமேவுங்குழல்வள்ளி நேயன்-சுவாமி
  புண்ணியனதேவருக்கும் மனிதருக்கும்நாயன் ௨௪
பச்சைமால்தனக்கு மருகோனே-சுவாமி
  பழனிமலைமீதினிலே மேவமுருகோனே ௨௫
வச்சிராயுதன்தம்பி மருகா-உந்தன்
  மலரடிஎனக்கருள்தர வேணுமுருகா ௨௬
நவவீரர்துணையான குகனே-நம்பி
  நாராயணன்றங்கை யபிராமிமகனே ௨௭
நவமணியணிந்த வொளிமூவா-நின்று
  நடனமிடுமயிலேறி யெனைவந்துகாவா ௨௮
கனககுண்டலமிட்டநீதா-சுவாமி
  கார்த்திகேயாலட்சம் படைவீரர்நாதா ௨௯
தனமேருபாக்கியமருள் வேலா-எங்கும்
  சர்வபரிபூரணா னந்தசிவபாலா ௩0
ஓராறுமங்கையர்கள் சேயன்-பவனி
  ஒய்யாரமாகமயில் மீதுலவுதூயன் ௩௧

ஈராறுபன்னிருகை யாண்டு-புவன
மெங்கெங்குமேத்தி மிருந்தமெய்யாண்டி ௫௨

ஆண்டிபொன்னாண்டிசிவ னாண்டி-பழனி
யாண்டிமலையாண்டிசிலை யாண்டியிவனாண்டி ௫௩

ஆண்டிமகனாண்டியிவ னாண்டி-நதிகள்
அழகானசாமிமலை திருப்பரங்குன்றாண்டி ௫௪

சிக்கல்புரவச்சேரி யாண்டி-சுவாமி
திருச்செந்தூரெட்டிகுடிகுன்றைக்குடியாண்டி ௫௫

மிக்கதிருவேரகத் தாண்டி- கதிரை
மேவிவளர்வேல்முருக னாறுமுகத்தாண்டி ௫௬

சோலைமலைகழுகுமலை யாண்டி-நல்ல
தோகைமலைவிராலிமலை சென்னிமலையாண்டி ௫௭

வாலைபருள்பெற்றவடி வேலா-முனிவர்
மாதவர்க்கேயெந்த நாளுமனுகூலா ௫௮

விடவரவுபடமும்விசை கெடவும்-படியே
வடவரைகள்கிடுகிடென கெஜமுமசைபடவும் ௫௯

கடல்சுவரகதிர்மதி கலங்க-தாவி
கனவேகமாகவருமயில்மீதிலங்க ௬௦

மேலாகிவிளையாடுமெய்யா-வெற்றி
சூலாயுதத்தையு மெடுத்தமுருகையா ௬௧

சாலோகசாமீபமென்னும்-சுவாமி
சாரூபசாயுச்சியபதவியிலேமுன்னும் ௬௨

ஆகமேவின்றபர நாதா-என்னை
ஆதரித்தாளவா வேணுங்குருநாதா ௬௩

தாகமாயிருக்குதுனைக்காண-கந்த
சுவாமிவருவாரெனநானெண்ணெதிரேதோண ௬௪

அரகராவேலனே நமாவோம்-சுவாமி
ஆறுமுகமாய்வந்தவடிவேகமாவோம் ௬௫

அரகராமுருகா நமாவோம்-வாலை
யம்பிகைபராசக்தி மைந்தாநமாவோம் ௬௮

அரகராகுகனே நமாவோம்-சுவாமி
அன்பருக்கன்பான பொருளோநமாவோம் ௬௭

அரகராதேவா நமாவோம்-சுவாமி
அகில புவனத்திலும் நிறைந்தாய்நமாவோம் சுஅ

மயிலேறுமொயிலா நமாவோம்-பொதிகை
மலைமேவுக் தமிழ்முனிவன் குருவேநமாவோம் சுகூ

மயிலேறும்கந்தாநமா வோம்-வட்ட
வடவரைவில்மேவுமால் மருகாநமாவோம் எ0

மயிலேறும்நாதா நமாவோம்-சுவாமி
மலைமேவும்பரமனுட குருவேநமாவோம் எக

மயிலே றுகின்றாய் நமாவோம்-தங்க
வடிவானவேலது வுகந்தாய்நமாவோம் எஉ

திரிபுரபவாவா நமாவோம்-வாலை
சேயனே திகழொளி பவாவாநமாவோம் எங

பரிபுரபவாவா நமாவோம்-வள்ளி
பாகனேபவனொழி பவாவாநமாவோம் எச

சரஹணபவாவா நமாவோம்-கந்த
சுவாமியேசயலொழி பவாவாநமாவோம் எரு

தருமதுரையேநீரு மென்னை-நல்ல
தருணமிதுகாணிந்த வேளையிலேயென்னை எசு

காவாவுன்னீரடிகள் தன்னை-நான்
கண்டெனது கலிதீர வந்துமென்முன்னை எஎ

வாவென்றுசொல்லமன மிலையோ-உமக்கு
வள்ளிதெய்வயானைவிடை தந்தனுப்பவிலையோ எஅ

தஞ்சமென்றேனே யுனக்கு-எனது
சஞ்சலமெனுங்கலியைத் தீர்ப்பாயெனக்கு எகூ

அஞ்சறிவு மானதா யகனே-சுவாமி
அகிலாண்டகோடிபிர்ம மாண்டநாயகனே அ0

உன்கிருபை தந்துமேகண்பாரும்-இந்த
உலகமுழுதாள்பவனே யென்கலியைத்தீரும் அக

அன்புபெரும்வரைராசன் பேராசுவாமி
அடியனுன்னடியிணையைக் காணநீரா அஉ

வாவாயென்றேவ. நீயென்றே சுவாமி
வடிவேலாவாவாவெனத் தொழுதுநின்றே அங

எவன்றேடினாலுக்தேடட்டும் -நமக்
கென்சொல்லிக்கவிபாடினாலும்பாடட்டும் அச

நமக்கென்னவென்றிருக்கிறீரோ-சுவாமி
ஞாயமோநானுமுறை யிட்டதறியீரோ அ௫

உமக்குமனமிரங்காததேது-எங்க
ளுத்தமிதுரந்தரியின் பாலாயிப்போது அசு

ஐயாநீகிருபைசெய்த தாலே-இந்த
அகிலாண்டகோடிபூ மண்டலத்தின்மேலே அஎ

மெய்யான சரிதையிலனேகர்-அதற்கு
மேலானகிரிகையி லிருப்பவரனேகர் அஅ

தவயோகக்காரர்வெகு வெள்ளம்-ஞானந்
தங்கியேயிருப்பவர்க ளோமகாவெள்ளம் அசு

அவர்களைப்போல்நான்பிறந்த திலையோ-சுவாமிக்
காளாகவெனக்குவிதி வயனெழுதவிலையோ சு0

அன்னையவளீன்றெடுத்த கெதியோ-யெனக்கு
ஆதியிலேமுன்னவர்கள் செய்துவந்தசதியோ சுக

என்னகுறையிருந்தாலுந் தீர்த்து-உந்தன்
இணையடிக்கி யாளாக வென்னையுமேசேர்த்து சுஉ

ஆளாக்கியாள லாகாதோ-எந்த
னகந்தனிலேநீயிருந்து வாழலாகாதோ சுங

பாழான மனங்குவியு திலையோ-யென்ன
பாவமோ வதிலிருக்கும் பிசகுதெரியலையே சுச

வஞ்சகமில்லாமலேகண் பாரும்-முடிவில்
மறலியுடதூதரெனை வருத்தாமல்காரும் சு௫

அஞ்சுதலையாருளுந் தரையே-உமக்கு
அஞ்சுதலையால்வேதனிருந்ததுவுஞ்சிறியே சுசு

ஆறுதலைகண்டண்டாய்யா-பின்பு
ஆறுதலையாய்ப்பதியை யாண்டாரேமெய்யா சுஎ

ஆறுபடை வீட்டுக் கதிகாரா வந்த
அரக்கருட னஞ்சாதபோர்புரியும்வீரா சுஅ

சத்தியுமைபாலகனேசாமி-உந்தன்
தாசனுக்குத் தாசனெனைக் காப்பதர்க்கேமி சுசு

சுத்த பரிபூரணா வுன்னை-ஒதி
துதிக்குமடி யார்க்கடிமை யாகவருளென்னை ௱
பொய்யாத வாழ்வருளவேலா-கதிரை
ஐயாவே யெனையாளுந் தேவாதிதேவா ௱௧
ஒய்யார மானமுருகோனே-வந்த
உற்டுவ மெனுந்துதியை செப்புவேணானே ௱௨
உரமான வசுரரிடராலே-தேவ
ரோடிமுறை யிட்டாரே கைலைமலைமேலே ௱௩
அரனசுரர் மேல்க்கோபமாகி-கைலை
யாளிவிழி தனிலே யொரு பொறி சிதறியேகி ௱௪
சரஹணப் பொய்கையி லமர்ந்து-அதுவுஞ்
சந்திரோ தயம்போலே பாலனென வந்து ௱௫
உருவாகி மலர்மீதி லானார்-எங்கள்
ஓம்நமசி வாயரெனும் பரமனருள் மகனார் ௱௬
அப்பனே சென்னியோ ராறாய்-மெத்த
வழகான செந்திரு புயங்க வீராறாய் ௱௭
உற்பவ மானபணி ரண்டு விழிகள்
ஒளிவாகி வோராறு பெண்கள்பா லுண்டு ௱௮
அயனையுஞ் சிறையினில் விடுத்தான்-கந்த
ணரனுக்கு வுபதேசஞ் சொல்லியே கொடுத்தான் ௱௯
கயமுகா சூரன்முதலோரை-கந்தன்
கைவேலி னாலவர்கள் கருவறுத்தாரே ௱௰
தங்கவடி வேலலங் காரன்-மாது|
தையல் தெய்வானை மணமேவு சிங்காரன் ௱௰௧
தென்கதிரை மானக ரிலங்கும்-சுவாமி
சிங்கார மாயுனது வருள்கிருபை பொங்கும் ௱௰௨
சித்தமு மகிழ்ந்துவரும் லோலன்-வள்ளி
தெய்வானைக்கிணையான சித்ரமயில் வேலன் ௱௰௩
சத்திவேலாயுதமு முடையான்-பூண்ட
தண்டைகள் கலீரெனவே வந்தருளும் நடையான் ௱௰௪
கடகமெனு மானதிங்களிலே-எங்கள்
கதிரேசன் திருவிழா பவனிவருகையிலே ௱௰௫

கடல்போலே பேரிகை முழங்க-விருது
கட்டிய மிருபுறமு மருங்கேதயங்க ௱௰௬
செங்காவிப் பட்டாலே கொடி-கொடிகள்
ஜெண்டாவு மாலவட்டக் குடைகள்பல கோடி ௱௰௭
மங்காத சாமரைகள் கோடி-வீசி
வருவார்கள் நடனமிடு மடமாதர்கோடி ௱௰௮
சேர்க்கையாய் முரசுசங் கூத-நல்ல
செந்தீ வளர்ப்பவர்கள் நான்மறையோத ௱௰௯
பார்க்கவெகு மாமுனிவர் வரவே-கவிகள்
பாடியே வரகரா வென்றுபுகழ்பெறவே ௱௨௰
ஆணிப்பொன் மாலைகளிலங்க-மொய்த்த
அழகான வாலாத்தி தீபமேதுலங்க ௱௨௧
மாணிக்கப் பேழையி லுகந்தார்-கந்தன்
மதயானை மேலேறி யேபவனிவந்தார் ௱௨௨
மதகரியோ வருகிறதைப்பாரும்-சுவாமி
மாணிக்கப்பேழையி லுகந்ததையும்பாரும் ௱௨௩
கதிர்காம திருவிழா நேத்தி-எங்கள்
கந்தனு முகந்ததிரு வாபரணஞ்சாத்தி ௱௨௪
கரியுலவு வனமூடு சென்று-செல்லக்
கதிர்காமம் போய்வந்து நீரறுப்பென்று ௱௨௫
சரியான பௌரணையை நாடி-கந்த
சாமிசங் கீதபரி வாரமுடன்கூடி ௱௨௬
வாரிபோல் பெருகிநீரோடி-வார
மாணிக்க கெங்கையிலே வந்துநீராடி ௱௨௭
கூரானை வடிவேல் சுமந்து-எங்கள்
குமரேசன் வள்ளிதனை நாடியேயுகந்து ௱௨௮
புள்ளிமயில் வேலர்விரை வாக-சென்று
பூவையெனுங் குறமாது கோவிலுக்குள்ளேக ௱௨௯
வள்ளியம்மை சுவாமிதனைக் கண்டு-வாரு
மணவாள ரென்றடி பணிந்தன்பு கொண்டு ௱௩௰
சித்ரமணி மலரணையில்த் தாவி-நல்ல
செங்கமலக் கரத்தாலணைத்திவர்கள்மேவி ௱௩௧
கொத்முத்து நத்துவளை திருத்தி-யிவர்கள்
குளிர்ந்தகம கமெனமலர் வாசனைகள்பொருந்தி ௱௩௨

இங்கிர்த மஞ்ஞுளகுண நீதா-யெனக்கு
யினியசுக போகமத லீலாவிநோதா ௱௩௩
எங்கள்குலம் விளங்கவந்த நேசா-சுவாமி
யெனக்கிரங்கி யிதுசமயம் வந்தவிசுவாசா ௱௩௪
அத்தைபெற்ற முத்தேயெங் கோனே-யென்ற
ஆரணங்கை யுபசரித்து தேனேயெம்மானே ௱௩௫
முத்திரையிட் டிலங்குகெங்கை யாளே-வள்ளி
மோகனமே யென்றந்த வேலவர்கையாலே ௱௩௬
கலந்தணைந்த சுகந்தமண வாசன்-எங்கள்
கட்டழகி வள்ளிதனை பார்த்துமதபோஜன் ௱௩௭
சலதரத்தைப் பழித்தகுழ லாளே-இந்திர
தனுவோவென் றதிசயிக்கும் புருவநுதலாளே ௱௩௮
எந்தனுக் கிசைந்த மனையாளே-வள்ளி
இந்திரன்மகள் தெய்வானைக் குகந்ததுணையாளே ௱௩௯
வந்துவெகு நேரமாகுதடி-யெந்தன்
மாதுதெய் வானையெனைத் தேடிவாள்நாடி ௱௪௰
போய்வாறேன் விடைதாடியென்ன-வள்ளி
பூவையவள் கேட்டெந்தென் சாமிநீர்சொன்ன ௱௪௧
வாய்ச்சம்பிர தாயம்வெகுவீச்சு-நான்
போய்வார மென்றுசொன்ன வகைதானென்னபேச்சு ௧௪௨
அங்கேபோய்செலுத்துமதி காரம்-யெந்த
னரண்மனையி லிருந்தாக்கால் நடக்காதோவீரம் ௱௪௩
இங்கேரண்டு நாளிருந்து போனால்-சுவாமி
என்னகுறை வாகிவிடுங் காணுமுமக்கதனால் ௱௪௪
என்மனையி லிருக்கையிலே யவளேன்-உம்மை
யேன்தேட வேண்டியது நீர்போறவிதமேன் ௱௪௫
உண்மையெனக் கின்னதென்று தானே-சுவாமி
உரையுமென வேலவரும் வள்ளியென்மானே ௱௪௬
இங்கேவந்து நானிருப்பதாலே-யென்னை
யெங்கையோ வென்றுதெய் வானையொருக்காலே ௱௪௭
மங்கையருந்தேடுவா ளின்று-யெனக்கு
வள்ளிநீ விடைதாடி போய்வாறேனென்று ௱௪௮
இவர்கூற வள்ளிமின்னாளே-சுவாமி
யின்றிரவு|யிங்கிருந்து போகலாம்நாளை ௱௪௯

அவசர மூனக்கென்னயங்கே-சுவாமி
ஆனாலும்நீர்போக சம்மதியே நிக்கே ௱௫௰
கூடாது உம்மைவிட மாட்டேன்-மூத்த
குடியாளுக் கஞ்சிநான் பயப்படவுமாட்டேன் ௱௫௰௧
தேடியிங்கே தெய்வானை வரட்டும்-யென்று
செப்புவதும் பொய்பினையும் வள்ளிகைநீட்டும் ௱௫௰௨
பார்த்தே தடிவள்ளி மானே-சற்றும்
பாராம லிம்மொழித மேன்சொல்லுவானே ௱௫௰௩
ஆத்திர மூனக்கென்ன போடி-தெய்வ
யானைக்கி நிகராவ ரோபெண்கள் கோடி ௱௫௰௪
சொந்தமாய் கிருபை பாராட்டி-அந்த
தோகையரைப் பருவமதில் நான்மாலைசூட்டி ௱௫௰௫
வந்தபடி யா லவ ளுனக்கு-மூந்தி
வந்தவளு மானதால் நானுமவளுக்கு ௱௫௰௬
அடக்கமா யிருப்பதுவே சிலாக்கியம்-வள்ளி
ஆனாலுமில்லறைத்துக் கதுதானே யோக்கியம் ௱௫௰௭
மடற்கொடி தெய்வானையவ ளிங்கே-நானும்
வந்தவகை தெரியாது தேடுவாளங்கே ௱௫௰௮
போகவிடை தாவென வதட்ட-யெங்கள்
பூவையெனுங் குறமாதுக் கதிகோபமுட்ட ௱௫௰௯
மாகனக மேடையிலிலங்கும்-உமது
மலையாட்டி மூத்தகுடி யாளெனவிளங்கும் ௱௬௰
தெய்வானை சொந்தமாய் போச்சோ-நானுந்
திருட்டுத் தனமாய்வந்த கள்ளிபோலாச்சோ ௱௬௰௧
கைமாயஞ் செய்தோமே நாங்கள்-ஒருவர்
காணாதே மாலையிட்டு வந்தீரோ வுங்கள் ௱௬௰௨
சாதியா ரேசுவா ரோகாண்-நீருந்
தலைமறைய யென்மனைக்கி வருவானேயென்காண் ௱௬௰௩
ஆதியிலே யெனையு நினைத்து-வந்த
தறியாளோ தெய்வானை யும்மையுமழைத்து ௱௬௰௪
கூட்டிவந்த நாரதரைக் கேளும்-வனத்தில்
குடித்தருகி லேயிருந்த காடிபுலிவாழும் ௱௬௰௫
காட்டினி லுமக்குதவி செய்தார்-வுங்களண்ணன்
கணபதியைக் கேட்டாலுஞ் சத்தியமாய்ச்சொல்வார் ௱௬௰௬

சிவதவங்கள் செய்சபைமுன் னாலே-வைத்து
தெய்வானை யைத்தாலி கட்டினதினாலே ௱௬௭
அவள்மாத் திரஞ்சொந்தக் கிளையோ-சுவாமி
ஆனாலும் நான்கிழக்கு முகமிருக்கவில்லையோ ௱௬௮
வள்ளியிவை சொல்லவே திகைத்து-சென்னல்
வளமான தென்கதிரை வேலனும் நகைத்து ௱௬௯
கள்ளிபோல் வீணிலிரை யாதே பொல்லாக்
கசடான குறவருட சாதியொளியாதே ௱௭௰
ரெண்டுசமு சாரமா காது-யென்று
நீணிலத்திற் சொல்லுவது சரியானதோது ௱௭௧
வண்டர்குல மானேயுனை நாடி-வந்த
மணவாளனுக் கெதிர்கள் பேசலாமோடி ௱௭௨
நில்லுநான் போய்வாரேனென்று-சொன்ன
நினவறிந்து வள்ளியவள் சீறியெதிர்நின்று ௱௭௩
வல்லப முமக்கென்ன காணும்-எனக்கு
வகைசொல்லி யப்பாலே நீர்போகவேணும் ௱௭௪
என்சமர்த்தைப் பாருமினி யென்றே-வள்ளி
இடைதனிலே சேலையை யிறுக்கியெதிர்கொண்டே ௱௭௫
அன்புற நெருங்குவது கண்டார்-வள்ளி
அப்பாலே நில்லென்று சொல்லுகிறேனென்றார் ௱௭௬
சொல்லுகிற சமாச்சாரமென்ன-உமது
தொழிலைநான் னெடுகிலு மறிந்துமினியென்ன ௱௭௭
நல்லதினிமேற்கொண்டு பார்ப்போம்-உமது
ஞாயமதை தேவசபை யிலேசொல்லிக்கேழ்ப்போம் ௱௭௮
தேவசபையிலேசொல்லிப்பாரு-அவற்கு
தெரியுமடி தினைப்புனத்தில் நீயிருந்தசீரு ௱௭௯
ஓவியமே உன்னுறுதி கேட்க-யெழுதும்
உடன்பிடிக்கை முறியுண்டோ கொண்டாடிப்பார்க்க ௱௮௰
உடன்பிடிக்கை முறியெழுதித் தாறேன்-வள்ளி
யுனக்கேவல் செய்வதற்கு உன்பிறகேவாறேன் ௱௮௧
கடக்கவெனைத் தள்ளாதே மானே-யென்று
கட்டிமுத்த மிட்டது கசம்பெறுவானே ௱௮௨
தனியே வனத்திலிரு பேரும்-கூடுஞ்
சையோக வேளையிலே பார்த்தென்னைநீரும் ௱௮௩

இனியசெங் தேனோகற்கண்டோ-உந்த
னிதழென்று சொன்னதுவு மில்லையோவுண்டோ ௱௮௪
முன்னிருந்த யினிப்பென்ன போச்சோ-யிப்போ
மூத்தகுடியாளுமக்கு சர்க்கரைபோலாச்சோ ௱௮௫
என்னைநீர் வசைசொல்வ தேனோ-சுவாமி
யென்குலத்தை நீரிகழ்ந்து பேசுவதுமேனோ ௱௮௬
தந்தையுங்கள் தேட்டையெடுத் தாரோ-யெங்கள்
சாதியார் வந்துநிதந்தின்றுகெடுத்தாரோ ௱௮௭
எந்தனற் குறைகளே துண்டோ-சுவாமி
இழுக்கெந்த சாதியிலு மில்லாமலுண்டோ ௱௮௮
மங்களகல் யாணமதில் நல்லாள்-அந்த
மணவறையி லென்தகப்பனிட்டநகையல்லால் ௱௮௯
உங்களிடம் வந்தநாட் கொண்டோ-யெனக்கு
ருத்திராட்ச வடத்துக்கொரு கடமணியுமுண்டோ ௱௯௰
மாதிவை யுரைக்கமுத் தையன்-வள்ளி
மங்கைதனைப் பார்த்தேது சொல்வார்மெய்யன் ௱௯௧
ஏதடிநீ பேச்சதிகங் கொண்டாய்-வள்ளி
யென்னுடைய சாதியி லிழுக்கென்னகண்டாய் ௱௯௨
குபேரன்மகள்போல பேசாதே-யுனப்பன்
கொடுத்துவிட்ட வரிசைகளை வெளியேசொல்லாதே ௱௯௩
சபையார்க ளென்னவறி யாரோ-யிந்த
தாரணியி லுள்ளவர்க ளெவருமறியாரோ ௱௯௪
உடுத்திவந்த துணிக்கிவேறுண்டோ-களிம்பு
ஊறிய பித்தாளை யெலைக்கிவேறுண்டோ ௱௯௫
தொடுத்திருந்த கருகமணி யோடே-யென்னை
துடர்ந்துவரும் போதுனக் கேதுபட்டாடே ௱௯௬
வண்ணார்கள் வெளுக்காத கலையுஞ்-சுத்த
வாணியர்கள் யெண்ணையிட் டறியாததலையும் ௱௯௭
புண்ணாக்கு போலழுக்கு மேனுங் - காட்டில்
புரண்டிசெடி முள்ளிழுத்து சுரண்டிவிட்டகாலும் ௱௯௮
எப்போதுங் காய்கிழங்கை தின்று - நீயும்
இருந்தகெதி தெரியாதோ வரும்போதென்பின்னும் ௱௯௯
அப்பவே நானழைத்து வந்து - நல்ல
வாபரண மானதையுமழகா யணிந்து ௨௱

செம்பவழ மாளிகை யமைத்து - உனக்கு
செங்கமலத் தாதிகளை யேவல்நேமித்து உாக

நம்பிநான் செய்ததை மறந்து வள்ளி
நாயகமே பேசுவது மென்னடியிகழ்ந்து உாஉ

மாதேநீ பதருதேவாடி-யெந்தன்
மனமுழுது மறியாமல் சொல்லாதேபோடி உாங

கோதையே யிதுவென்ன மூர்க்கம்-உங்கள்
கூரறிந்து சொல்லுகிறேன் குறவருடமார்க்கம் உாச

சாராயங் கள்ளுகள் குடித்து குறவர்
சந்திக்கி சந்தியே சண்டைகள்பிடித்து உாரு

பூராயம் தெரியாமற் கத்தி- கண்ட
பூனைகளை யெரவார முசலென்றுகுத்தி உாசு

தின்பதுவு முண்டதிக மாக குறவர்
சேரியிலே நீவழகி வந்தவைபோக உாஎ

செம்பவள வாயாளே யென்று - சுவாமி
செப்பவே வள்ளியவள் வெஞ்சினங்கொண்டு உாஅ

விண்ணுணம் பேசுவது சீர்ரா-சுடலை
மீதிலெலும் பானதுவை தின்றதுவுமாரோ உாகூ

கண்ணப்பனெச்சிதிங் கிலேயோ - சிவனுங்
கரிக்காகப் பாலகனைக் கொன்றதுவு மிலேயோ உாய

புத்தியுமக்கில்லாமற் போமோ-கெட்ட
புனக்குறவர் பெண்ணைநீர் சம்மதிக்கலாமோ உாயக

யெத்திசையும் புகழ்பெற்ற நாதா-வென்று
யிவள்சொல்லும் வசைகண்டு கூறுவார்தோதா உாயஉ

அடங்கேரு வார்குடி மிருந்தால் குரவர்
அவர்தனக் கேகிலவுக் கில்லாதிருந்தால் உாயங

கடன்வாங்கு வார்சம்மதித்து-தாலி
கட்டிய பெண்டுகளை யீடாகவைத்து உாயச

குடித்துவிட்டபணத்துக் கீடாக-வைத்த
குறத்திகளைத் பணங்கொடுத்த குறவன்வெகுவாக உாயரு

அடுத்தவளை யனுதினமுங் கூடி-யிவர்கள்
அஞ்சாறு பிள்ளைகளைப் பெற்றபின்தேடி உாயசு

பணங்கொடுத்து திருப்புகிற போது-பெற்ற
பாலரையுங் கூடவே கூட்டியவள்மாது உாயஎ

குணமாக முன்னீடுவைத்த - பழைய
 குறவனுடன் போவதுங்கள் சாதியிலேமெத்த ௨௱௰௮

இதுபுதுமை யிவ்வுலகிலுண்டோ-வள்ளி
 யேந்திழையே யிதைவிட லெச்சைவேறுண்டோ ௨௱௰௯

கதிகொண்ட மயில்வாகனத்தார்-இந்தக்
 கதைசொல்லவே வள்ளி யவளெதிருரைத்தாள் ௨௱௨௰

குறத்தியென்று யெனக்குவசை புரியுஞ்-சுவாமி
 கும்பமுனி யாலுங்கள் சேதிகொஞ்சந்தெரியும் ௨௨௧

மறந்தீரோ நீரறிந்த திலையோ-னொப்பன்
 மலைவேடன் மகளைப்போய் மாலையிட்டதிலையோ ௨௨௨

சிந்தைமகிழ்ந் தொரு பெண்ணைத் தூக்கி-உங்கள்
 சிவன்தலையில் வைத்துமே சுமந்ததுக்குச்சாட்சி ௨௨௩

நந்திகேசு பார்சொல்லக் கேட்டேன்-சுவாமி
 ஞாயனிச மில்லாமல் நான்சொல்லமாட்டேன் ௨௨௪

ஆட்டுக்கா லதுதனை யெடுத்தார்-உங்க
 ளப்பனென் றவனிமுழு தெங்கும்பழித்தார் ௨௨௫

கேட்டுப்பா ருமதுதாய் ஐயோ - ஒற்றை
 மாட்டுக்கா றனைவைத் திருந்ததும்பொய்யோ ௨௨௬

கண்ணு யிரங்கொண்ட நேத்தி - னொம்மான்
 பெண்ணாசை கொண்டல்லோ வந்தவபகீர்த்தி ௨௨௭

பெண்ணொருவர் கொடுக்காத தெதினால் - னொண்ணன்
 பெறுவயறு கொண்டுவழிக் கரையிலிருந்ததினால் ௨௨௮

அண்ணனுமே மத்தாளங் கொட்ட-சொந்த
 அருமைமரு மகனின்று கைத்தாளந்தட்ட ௨௨௯

விண்ணவர்கள் கூடியே நகைக்க - வந்த
 வேதியரும்மாதவருங் கண்டுபிர்மிக்க ௩௩௰

தேவடியாள் போலுமது வன்னை-கூடுந்
 தேவசபை யிலேனின்று ஆடலையோமுன்னை ௨௩௧

பாவலருக் கருள்புரியுஞ் சீலா - யிதையும்
 பார்த்தவர்கள் சிரியாரோ தங்கவடிவேலா ௨௩௨

பத்மாசூரனுக்கு மிகப்பயந்து - உங்கள்
 பரமசிவ னோடலையோ காட்டுவழிநுழைந்து ௨௩௩

கைப்பொருளு மில்லாமல்தேகி-யென்று
 கைப்பிச்சை வாங்கலையோ பரமசிவபோகி ௨௩௪

கும்பமுனிக் கருள்புரிந்தோரே-யென்று
கூவியே வள்ளிசொல்லு மொழிகளறிந்தாரே ௨௩௫

தென்பானையென்மோக வள்ளி-யிந்த
சீமையிலே திருடிவருங் குறவர்குலக்கள்ளி ௨௩௬

குடிகொண்ட வனக்குறவச்சாதி-வகையை
கூறறிந்து சொல்லுகிறேன் கேளுமவர்சேதி ௨௩௭

சதிர்பெருகுந் திருவிழாக் கடையில்-ஜனங்கள்
சந்தடிக ளாகவே சயனிக்குமிடையில் ௨௩௮

கூசாமல் கூடவே படுத்து-தூக்கம்
குலையாமல் பணிதிகளைக் கழற்றியேயெடுத்து ௨௩௯

பேசாம லோடுவது கண்டு-குறத்தி
பெரியதனக் காரர்களு மேபிடித்துக்கொண்டு ௨௪௰

வம்பிலே தலைமயிரைக் கட்டிகுறத்தி
மார்பிலே போடுவார் சொல்லென்றுகிட்டி ௨௪௧

செம்பாணி கொண்டுமே யிருத்தி-அவர்கள்
சேலையை யுரிந்தம்மண மாகவேயிறுத்தி ௨௪௨

அடிதண்ட மாகவே யடிப்பார்-குறவர்
அப்பவு மெடுக்கவிலை யென்றுமே துடிப்பார் ௨௪௩

தடியடிக்கி யசையாத சாதி-குறவர்
சங்கைகெட்டு நிற்பவர்கள்தெரியுமவர்சேதி ௨௪௪

என்றிவ ருரைக்கவுமே மாது-சுவாமிக்
கெதிராகநின்றேது சொல்வாளப்போது ௨௪௫

தொண்டர்தொழு கின்றமயி லேறுஞ்-சுவாமி
சொல்லுவேனுங்கள் குலவளமைகளைப் பாரும் ௨௪௬

அடையாளஞ்சொல்லுகிறேன் கேளும்-நல்ல
ஆவினங்கள் கூடிவரு மாயப்பாடிவாழும் ௨௪௭

இடையருட வளவிலென் றனுப்-உறியி
லிருந்தவெண்ணை திருடினதை யாரென்றுகேளும் ௨௪௮

அன்றுடனசோதையறிந்து-வந்து
ஆவினங்கள் கட்டுகிற கயறால்வரிந்து ௨௪௯

ஒன்றாக மாதரொரு பக்கங்-கூடி
உரலோடேகட்டினதைச் சொன்னாலும்வெட்கம் ௨௫௰

கட்டுண்டதும்ரோசமில்லையோ-பெண்கள்
கட்டிய சேலைகளைக் களவாண்டதில்லையோ ௨௫௧

வெட்டிய சமர்க்களத்தி லேரும்-கிருஷ்ணன்
விஜையனுட குதிரைகளை மேய்க்கலையோபாரும் ௨௫௨

ஊத்துகிற கஞ்சிகளை;டியத்தார்-கிருஷ்ணன்
ஊர்க்காலி மாட்டையெல்லாங் கூட்டியங்கேமேய்த்தார் ௨௫௩

கூத்ததிகமுண்டின்னம்-ரொம்ப சொல்லக்
கூசுதே யென்மனமு மென்றிவளியம்ப ௨௫௪

கேட்டவடி வேலவர்கை நீட்டி-வள்ளி
கேளடி யுங்களுட வீடுமலைநாட்டில் ௨௫௫

நீட்டியிரு கால்களை நிறுத்தி-அதனில்
நெட்டுமுட்டாகவளை கூட்டியேபொருத்தி ௨௫௬

நத்திய கயற்றால் வரிச்சுமழைக்கு
நனையாமல் மூங்கிலிலை யால்மேய்ந்தகுச்சு ௨௫௭

சுத்திவைத்த சுவரெல்லா-மோட்டை.பசந்து
தூங்கவும் விடாதங்கே முணுமுணுத்தமூட்டை ௨௫௮

ஆடேறி மேயுமதில் தொல்லை-வீட்டில்
அஞ்சுபேர் தனக்கதிக மிருக்கவிடமில்லை ௨௫௯

மூடாதவாசல்களைக் கண்டு-பார்த்து
மூடினாலு சரவொரு முகட்டொழுக்குமுண்டு ௨௬௦

தேடாத பொருள்சிலவு காணும்-வைத்த
தீபமுந் தெரியாது தோணாமல்தோணும் ௨௬௧

கூடாது குறவீட்டைநம்ப-சற்றே
குந்தவைக்க முடியாது நசுப்புநசுப்புரொம்ப ௨௬௨

குறம்பாடிக் கஞ்சிகளை வாங்கும்-உங்கள்
குறவரிட பக்தியெல்லாம் கூறையிலேதூங்கும் ௨௬௩

வரம்பேது மில்லையென் றாளும்-யென்று
வடிவேலர் சொல்லவே வள்ளிமின்னாளும் ௨௬௪

தமக்கென்று சிறுகுடிசை கட்டி-குறவர்
தானிருப்பதுவேவசை யில்லாதகெட்டி ௨௬௫

உமக்கொரு தவத்தினிலும் நாடி-சுவாமி
ஒண்டயிடமில்லாமல் மலைக்குமலையோடி. ௨௬௬

கையில்லரைக் காசுமே யில்லாமல்-வீடு
கட்டியே குடியிருக்கவகையு மறியாமல் உசுஎ

வெய்யிலும் வேனிலுங் காய்ந்து சுவாமி
மெத்தவருஷித்தமழை பனியால்நனைந்து உசுஅ

இருப்பதுவைக் கண்டுமனம்வாடி-உனக்கு
யிவ்வுலகி லுள்ளவர்க ளெல்லோருங்கூடி. உசுகூ

சிறக்கவேகோவில்க ளமைத்து-உமக்கு
செம்பொன்மணி யாபரணம் விருதுகள்சமைத்து உஎ௰

வடிவேலா வாவென்று யெண்ணி-உம்மை
வரிசையிட்டு வைத்தார்கள் பிரதிஷ்டைபண்ணி உஎக

அடியவர்கள் புண்ணியமீ தையா-நீரும்
அழகான கோவில்களிலிருக்கிறது மெய்யா உஎஉ

தேருமத கரிபரியு மிரவல்-உமக்கு
ஜெயமேள பேரிகையுங் கோவில்களுமிரவல் உஎங

ஏறுமயில் வாகனமு மிரவல்-உமக்கு
யிட்டநவரத்னமணி யாபரண மிரவல் உஎச

இத்தனையு முமக்கிரவல்த் தானே-குறவர்
இருப்பிடத்தைப் பழிக்கிறீ ரெண்ணுமல்வீணே உஎரு

வெற்றிவே லதுதானே சொந்தம்-உமக்கு
வேறேயொரு ஆஸ்த்திகளின் மேலென்னதொந்தம் உஎசு

மச்சமுனி மறைபொருள் களாலும்-உங்கள்
வங்கிஷவகுப்புகளைச் சொன்னாரேகேளும் உஎஎ

மச்சானே மறையோதும் வேதன்-உமக்கு
வாய்த்ததொரு மாமனே அளவளந்ததாதன் உஎஅ

ஆத்தாளோ பாவீருப் பறச்சி-அவளுக்
கருமையுள்ள தமைபனையும் வளர்த்தவளுமிடைச்சி உஎகூ

தாத்தாவோ மீன்காரக் கரவன்-உமக்கு
தளகர்த்த னவனும் நல்லகுலமறவன் உஅ0

அரனென் றுமைமீன்ற தய்யா-சங்க
மாண்டியல்லோ சாதியிலே சொல்வார்கள்மெய்யா உஅக

வரமுறைக ளில்லாத நாட்டம்-உங்கள்
வங்கிஷங்கள் தெரியாதோ பலசாதிக்கூட்டம் உஅஉ

இதற்குமுன்னே நானறிந் தாலும்-உமக்கு
இசைவேனோ நீர்குட்டிக் கரணம்போட்டாலும் உஅ௩

அதற்கென்ன செய்பலா மையா-நாங்க
ளானாலுங் குரச்சாதி யென்பதும பொய்யா உஅ௪

பண்டாரம் நானென்று கத்தி-யெந்தன்
பரணைதிரேவந்தீரே யதுவென்னபுத்தி உஅ௫

கொண்டுகுலம் பேசுவது பேச்சோ-சுவாமி
கொய்ததினை மாவுக்கெனை கெஞ்சினதும்போச்சோ உஅ௬

பேருதெறி யாமலுரு மாறி-வந்து
பிசகுசெய்த மாதரி னுசைமதமீறி உஅ௭

பாரமத யானையும்வரா விட்டால்-உமது
பாசாங்குக் குள்ளாக மாட்டேனில்லாட்டால் உஅஅ

வழுகியிந் தாடிகுற வஞ்சி-யென்று
வனவேடன் போல்வந்து யென்னெதிரேகெஞ்சி உஅ௯

கனையாகு தெனவந்து முட்டி-நீரும்
காரியங்கொண்டபின் பேசுகிறீர்கெட்டி உ௯௰

வலியநான் வந்தேனோ தொட்டு-நீரும்
வஞ்சகம் பேசுறீ ரிதுவென்னசொட்டு உ௯௧

சலியாமல் நீருறுதி சொன்ன-மொழிகள்
தவறுவரோ கலிகால மானாலுமென்ன உ௯௨

பொன்னடி துலங்கிய யென் மாமி-பெற்ற
புண்ணியனே யனுதினமு மகலாமல் சாமி உ௯௩

யென்னருகி லிருமென்று கேட்டால்-சுவாமி
யெனகுலத்தை நீர்பழிக்கயுமக்கு விளையாட்டா உ௯௪

வையகத்துக் சேர்க்காது யென்னை-நீரும்
வஞசகமா தாயிழந்து பேசவதுதன்னை உ௯௫

தெய்வயானை யோசொல்லி விட்டாள்-எந்த
சிறிக்கியுமக்கிவ்வளவு சூதுசொல்லிதொட்டாள் உ௯௬

எப்படியோ நானறிய வில்லை-மேலோக
மெங்கும்நீர் போகாத விடமொன்றுமில்லை உ௯௭

இப்படியு மருந்திட்ட தாரு-உமக்கு
யேலாதோ சொல்லவந்த மங்கையர்கள் பேரு உ௯அ

வருந்திவிருந் தனித்தவளைச் சொல்லும்-அவளை
மயிர்பிடித்து கொண்டாறேள் சற்றேயிங்கேநில்லும் உகூகூ

மருந்திடு மயக்கமில்லா விட்டால்-எனக்கு
பதில்சொல்ல மாட்டீரே நானெதுவுங்கேட்டால் ௩00

முருக்குவளை தாதிகளே வாடிநம்ப
முத்துலிங்க சுவாமியேநீ கூட்டிவாபோடி ௩0க

கருதுமருந் திடுபிசகு தோணும்-எந்தன்
கணவனெனுங் கந்தருக்கு கைபார்க்கவேணும் ௩0உ

மின்னாரே யென்றிவளுஞ் சொல்ல-யெங்கள்
வேலரிது புதுமையெனக் கேட்டவருமெள்ள ௩0௩

யென்னடிவீண் யோசனைகள் கொண்டாய்-நானும்
யெவள்வீட்டி லேயிருந் துண்ணதைநீகண்டாய் ௩0ச

என்னுடைய செல்வுருதி மீறி-நீயும்
எதிர்பேசி னதினாலே யுன்னைநான்சீறி ௩0ரு

சொன்னவசையல்லாது கண்ணே-சும்மா
தோகையே நானுமுனை போவேனோபெண்ணே ௩0சூ

மயங்காதே நீவள்ளி மாதே-உந்தன்
மனமறியநான் சொன்ன தல்லாதிப்போதே ௩0எ

ஜெயமாக நான்போயி வருவேன்-வள்ளி
தினமுமுனைப் பிரியாமல் தெரிசனமுந்தருவேன் ௩0அ

உந்தனைவிட்டகல்வேனோ மானே-யென்று
யுபசாரஞ் செய்தங்கிருக்கையிலே தானே ௩0கூ

கந்தனையுங் கோவிலுக்குள் தேடி அங்கே
காணாமல்த் தெய்வானை யம்மன்மனம்வாடி ௩க0

மங்கையரே சந்த்ரப்பிர காசன்-அந்த
மாணிக்க கெங்கைக்கு போனமுருகேசன் ௩கக

யெங்கேயென வேலவரைத் தேடி-நீங்க
ளிதுநிமிஷம் வரவேணு மென்றிடவேயோடி ௩கஉ

தாதியர்களெல்லோருஞ்சென்று-யெங்கள்
சண்முகவே லாயுதனைத் தேடினாரென்று ௩க௩

ஆதிசிவமாணிக்க கெங்கை-தீர்த்த
மாடவந்த வேலவரைக் கண்டீர்களோயிங்கே ௩கச

பாதிபிறை நுதலழகி யாளே-அவள்தன்
பர்த்தாவைக் காணோமென்று தேடிவதினாலே ௱௧௫

கதித்தபுகழ் கொண்டமுனி வோரே-யெங்கள்
கந்தனையுங்கண்டதுண்டோ சொல்லுவீர் நீரே ௱௧௬

காணிக்கைகொண்டுவந் தோரே-எங்கள்
கட்டழகிதெய்வானை மணவாளனாரே ௱௧௭

மாணிக்கசெங்கைநீராட-யிங்கு
வந்தவரைக் காணீர்களோயினி யெங்கேதேட ௱௧௮

பாங்கியர்கள் நதியெங்குந்தேட-கோவில்
பணிவிடைக் காரர்தெரு வீதிவழிநாட ௱௧௯

ஏங்கியவர்தேடுவது கண்டு-சுவாமி
யெங்கோனுஞ் சிந்தையி லறிந்தன்புகொண்டு ௱௨௦

நினைவில் மறக் காததெய்வ யானை-யிந்த
நிமிஷமே கூட்டிவா வென்றேவுஞ்சேனை ௱௨௧

எனையழைக்க வேணுமென்றுதேடி-வாறூர்
எந்திழையே நான்போயிவரவும் விடைதாடி ௱௨௨

தாடியென்றுசொல்லவே திகைத்து-வள்ளி
தையலருஞ் சுவாமிதனைப் பார்த்துமேநகைத்து ௱௨௩

தேடிவந்தபேர்களோகா ணடிப்பேன்-அந்த
தெய்வயானை வந்தாலுமேசண்டைபிடிப்பேன் ௱௨௪

என்னுடையகணவனையுந்தேட-அவளுக்
கென்னவதி காரம்விடை கேழ்க்குகிறீரோடா ௱௨௫

மன்னவா யிதுவென்ன வென்றே-சொன்ன
வள்ளிதனை யுபசாரஞ் செய்தருகில்நின்றே ௱௨௬

யெனக்குரியமானேநீ கோபம்-இப்போ
யென்பேரில் வைக்காதே வீண்மனஸ்தாபம் ௱௨௭

உனக்குநான் பிசகுசெய் வேனோ-பெண்ணே
யோசனைகள் செய்யாதே நான்மறப்பேனோ ௱௨௮

போய்வாறேன் வள்ளிதய வாக-யெனக்கு
புகழ்ந்துவிடைதாடி தெய்வானையிடமே ௱௨௯

வாய்திறந்து சொல்லுமன மகிழ்ந்து-யென்று
வடிவேலர் கேழ்க்கவே வள்ளியுமுகந்து ௱௩௦

மறைபுகழு மின்றவடிவோ-சுவாமில
மணவருத்த மில்லாமல் போய்வாருஞ் சிலா ௩௩௧
இறையவருக் குகந்தமகனாரே-யென்று
யிவள்சொல்ல வேலர்வழி கூடநடந்தாரே ௩௩௨
சித்திரவடி வேலவர் நடந்தார்-இங்கே
தேடிவந்த தாதியர்கள் கண்டபடிபணிந்தார் ௩௩௩
வெற்றிமயிலோனன்பு கொண்டு-கோயில்
மேவியதெய்வானையையுங் கண்டெதிரேசென்று ௩௩௪
மங்கையரே யெனைத்தேடு வானேன்-நம்ம
வள்ளியம்மை தன்னுடைய கோவிலுக்குப்போனேன் ௩௩௫
செங்கமலமாதேயென் கண்ணே-யிப்போ
தேடினது மென்னவகை சொல்லாயோபெண்ணே ௩௩௬
தெய்வானை யென்றார் துணிந்து-அந்த
தேவிசெவ் வேள்பாத மலரடிபணிந்து ௩௩௭
வைபோக மானவடி வேலே-உடைய
மணவாளா உமக்குகித மிதுதானோவேலே ௩௩௮
இளையாள்மே லிருக்கிற பாசஞ்-சுவாமி
யென்பேரிலேனில்லை யுமக்குவிசுவாசம் ௩௩௯
அழையாத விருந்தோரீர் காணும்-வள்ளி
யவள்மனைக்கிநிதம் வலியப்போகவேணும் ௩௪0
முழுக்கவே யும்மாலே யேச்சே-சாதி
முறைதவறிக் குருவருட சம்மந்தமாச்சே ௩௪௧
இழுக்கான சாதியிலே-மாலை
யிட்டாலுமேன்மையது தருவரோயோகி ௩௪௨
அடிக்கடிநீ வள்மனைக்குப்போனால் மெத்த
வலக்களிப்பாகவே சொல்லுவாளானால் ௩௪௩
குடிதனி லுயர்ந்தவளுமில்லை-வள்ளி
குறவர்குல மானதால் சொன்னேனென்சொல்லை ௩௪௪
நிசமென் றுநீரெண்ணு வீரோ-உமக்கு
நேர்ந்ததுவும் வள்ளியுட மோகமதவீரோ ௩௪௫
அசையாமலானந்த மீறி-வள்ளி
ஆசைகொண்டு பேசுகிறீர் நாணுமக்குப்பாரி ௨௪௬

யாகிரா னெடுத்ததென்ன கோட்டை-புவியில்
அறியாரோ நீரெனக்கு தேடிவருந்தேட்டை ௧௪௭

தேசியெனவாண்டிபோ லானீர்-வள்ளி
தேவியாள் தினைமாவை தின்கவேபோனீர் ௧௪௮

திரிபுவனை யருள்பெற்ற பாலா-உமது
சித்தமதுவெப்படியோ கதிரைவடிவேலா ௧௪௯

அரிமருக ரேயென் றுரைக்க-யெங்க
ளாறுமுகன் சொல்லுவார் தெய்வானைமெய்க்க ௧௫௦

மானேநான் உன்வருதி பெற்றேன்-பின்பு
வள்ளிதனை மாலையிட்டு கூட்டிவந்துவைத்தேன் ௧௫௧

தேனேயென் மேற்பிழைக ளில்லை-உனக்கு
தெரியாதோ வீணில் பேசுவதுதொல்லை ௧௫௨

கோவிலுக்கு நீபோடியென்று யெங்கள்
குமரேசன் சிம்மாசனத்திலேயென்று ௧௫௩

சேவலொரு கையினி லிருக்க-யெங்கள்
சித்திரவடி வேலவரு மேகொலுவிருக்க ௧௫௪

சூடதீவாரா தனைக்கி-வந்து
சூழ்ந்தவர்கள் கோடானு கோடியன்றைக்கி ௧௫௫

அடியவர் பணிந்து துதி பாட-கதிரை
அறுமுகன் மீதினில் கவிமாலைசூட ௧௫௬

சிம்மா தனத்தி லிருக்க-யெங்குஞ்
ஜெயஜெயவென வந்தவர்கள் சூழவேபெருக்க ௧௫௭

அம்மாபரஞ்சோதி பாலன்-நல்ல
அன்புடனருளுவா ராறுமுகவேலன் ௧௫௮

துன்பவினை யணுகாமல்த் தானே-நீங்கள்
சுகமாக வாழ்வீரென் றெல்லவர்க்குந்தானே ௧௫௯

தென்கதிரை வேலாருளாக-வந்த
தேவர்களு மனிதர்களுந் தங்கள்பதிக்கேக ௧௬0

சித்தர்களும்வந்துநிதம் பணிய-யிந்த
செந்தமிழ்தனக்குதவி செய்சுப்பிரமணிய ௧௬௧

கர்த்தனரு ளாலேகுறை யில்லை-ஆருங்
கதிர்காமமென்றாலும் வறுமைகளுமில்லை ௧௬௨

தேவர்களு முனிவர்களும் வாழி-யெங்கள்
திருமாலு மயனாலு முமையாளும்வாழி ௱௬௩
நாவலரும் பாவலரும் வாழி-வள்ளி
நாயகன் மேற்கவியி தென்னாளும்வாழி ௱௬௪
புள்ளிமயில் வடிவேலும் வாழி-யிந்தப்
புவியெங்கும் நகரத்தார் புகழ்பெறவேவாழி ௱௬௫
வள்ளிதெய் வானையுடன் மேவி யோக
வாழ்வுபெறுங் கதிரேச னென்னாளும்வாழி ௱௬௬

கதிரேசன் ஆனந்தக்களிப்பு.

முற்றிற்று.



கதிர்காமத்துலவசல்.

சீர்வளருங்கதிரை நாதன்மேல்சிந்துபாட
சித்திவிநாயகனை யெண்ணியே-வாலை
சத்திசிவனைத்துதி பண்ணியே ௧
சத்திசிவனருளும் வெற்றிவேலவர்மலர்த்
தாளிணை தன்னைமற வேனே-கந்த
வேளெனுமெங்கள்முரு கோனே ௨

கோனெனுமிந்திரனுந் தேவருந்துதிசெய்யுங்
கும்பன்குருவைப்பணிந் தேற்ற-வெகு
யின்பமுடனேகதை வாழ்த்த ௩

யின்பமுடனேவரு மன்புள்ளதோழியரே
யெங்குலதேவனருள் சேரும்-இந்த
தென்கதிர்காமமதைப் பாரும் ௪

தென்கதிர்காமமென்றால் யெங்கும்பிரகாசமாக
சேவல்க்கொடிதுலங்கு தேதையா-யிந்த
மாவளமாநகரில்த் தானையா ௫

மாவளமானயிந்த மாநகர்தன்னில்வள்ளி
மங்கைக்கிசைந்தமுருகேசன் பெண்ணே-வேல
ரிங்கேயிருக்கிறார்தான் கண்ணே ௬

இங்கேயிருக்கிறவர் செங்கைவேலவரென்றால்
யிந்தமதகரிமேல்ப் பாரையா-மேவி
யந்தாபவனிவாற தாரையா ௭

அந்தாபவனிருவரும் கந்தன்பன்னிருகையன்
ஆனைமேலேறிவரு வோரடி-தேவர்
சேனைசேனாதிபதி தானடி ௮

சேனாதிபதியிவ ரானைமேலேறிக்கொண்டு
தெருவில்பவனிவரும் லோலனே-வெகு
அருமையாயீன்றவளார் வேலனை ௯

அருமையாயீன்றவளுந் திருமாலுடன்பிறந்த
ஆத்தாளே யெங்கள்பரமேஸ்வரி-கைலை
காத்தாளேமங்கைமங்களேஸ்வரி ௧௦

காத்தாளேசெங்கைவேலனாத்தாளிவளென்றீரே
கயிலாசநாதர்க்கிவளாரு-யெனக்
கொயிலாகசொல்லுமறுசீரு ௧௧

ஒயிலாகயீஸ்பரியுங் கயிலாசநாதருக்கு
உத்தமிசொந்தமனையாளடி-வாலை
சத்திசிவமென்பார்கள் கேளடி ௧௨

சத்திசிவனையர் பெற்றிடும்ரதிமதன்
தான்வந்தெதிர்த்ததென்ன சீரையா-சிவன்
ஏனவர்தன்னையெரித் தாரையா ௧௩

ஏனெரித்தாரென்றுயே மானேயுடையவர்மேல்
யேறுக்குப்பாணமதனே னெய்தான்-சிவன்
வாறுக்கனலாகவேதான் செய்தான் கச

வாறுக்கெதிர்த்துவந்த போதுவிஜையன்வில்லே
வாங்கிசிவனேயடித்தே வைதான்-சிவன்
தாங்கியருளவர்க்குயேன் செய்தான் கரு

தாங்கினறுதவத்தா லோங்கியபார்த்தனெனுந்
தானேபொறுத்தாரருள் சிந்தையார்-இந்த
ஆனேமேல்வாறகந்தன் தந்தையார் கசு

ஆனேமுகமும்பெரும் பானேவயறிலங்க
அந்தாயிருக்கிறுரே பாரையா-ஒரு
தந்தமிலங்கியவ ராரையா கஎ

தந்தமதுதுலங்க வைந்துகரமிலங்க
தனியேயிருக்கிறவர் தான்பெண்ணே-வள்ளிக்
கினியகுமாரன்தமை யோன்கண்ணே கஅ

இனியகுமாரனேயும் கனிவாய்வளர்த்தெடுத்த
யீசனுக்குயிர்தப்பிள்ளே யேனே- தந்தி
வேஷமெடுக்கவிதி தானே ககூ

வேஷமெடுத்தறுகண் டேசியவள்ளியஞ்சி
வேளெனுங்கந்தனேக் கொண்டாடிஞள்-ஒரு
தாழ்வன்றிமாலேயிடக் கூடிஞள் உ0

தாழ்வன்றியேபுவியில் வாழ்வுமிருந்தகந்தன்
சங்கையில்லாமல்கெஞ்சி நேரே-குற
மங்கையைக்கூடிக் கொஞ்சிஞரே உக

மங்கைகுறவருட தங்கையல்லடிபெண்ணே
வந்தபகவன்முனி வேண்டி-அதி
சொந்தமாய்ப்பெற்ற வள்ளிதாண்டி உஉ

சொந்தமாய்வேலனுக்கு யிந்தவள்ளிக்குமுன்னே
சூட்டவில்லேயோமண மாலே-திருப்
பூட்டவில்லேயோபுவி மேலே உந

பூட்டவெதெய்வானேயைக் கேட்டுமுன்னேயிலே
பூமணஞ்செய்தாரடி வேலன்-ஆழி
வாமனன்தங்கையருள் பாலன் உச

வாமணனேமஞ்செய்து நேமகமாய்மாலையிட்டு
வந்தவர்வட்டக்குடை மின்ன-யிந்த
தந்திமேலேறிவாற தென்ன ௨௫

தந்தியிலேறிவார இந்தத்திருவிழாவின்
சங்கையதுதானடி கண்ணே-சுவாமிக்
கிங்கேவளமையிது பெண்ணே ௨௬

இங்கேவளமையென்று லெங்கும்பகலைப்போலே
யிருபுறமுஞ்சனங்க ளேந்தியே-கொண்டு
வருகிறதீபமென்ன காந்தியே ௨௭

காந்தியுடனேகையி லேந்திக்கொண்டாடிச்சிலர்
கர்ப்பூரதீபமதைத் தூண்டி-வாறூர்
சுப்பிரமணியனுக்கே தாண்டி ௨௮

தாண்டியுபசரித்து வேண்டியதர்மஞ்செய்ய
சத்திரங்கட்டிவைத்த தாரையா-வேலை
சித்திரமானதிதைப் பாரையா ௨௯

சித்திரமானவன்ன சத்திரங்கட்டிவைத்தோர்
செந்தமிழ்சேர்நகரத் தாரடி-வைத்த
நந்தவனத்தைச்சுற்றிப் பாரடி ௩௦

நந்தவனமும்வைத்து சொந்தமடங்கட்டிய
நகரத்தாரென்றலவ ராரு-அவர்
புகழ்பெற்றிருப்பதெந்த வூரு ௩௧

ஊரெனும்பாண்டிதேசத் தாரெனும்பேர்புகழ்ந்து
ஓங்கியதொண்ணூற்றுறா ராடி-வெகு
பாங்குள்ளநாட்டுக்கோட்டையாரடி ௩௨

நாட்டுக்கோட்டையாரென்றால் வாட்டமில்லாதலங்கை
நாட்டுக்குவந்தவகை யேதையா-புகழ்
தீட்டும்நகரத்தார்கள் தானேயா ௩௩

தானேயாவென்றுசொன்ன மானேகொழும்பினிலே
சந்தோஷமாகவேயா பாரமுஞ்-செய்ய
வந்தவர்களிவரென் னேரமும் ௩௪

என்னேரமுங்கொழும்பில் சொர்ன்னயாபாரஞ்செய்தால்
யிந்தக்கதிர்காமத்தை நாடியே-யிவர்
வந்ததென்னபுகழ்கள் பாடியே ௩௫

பாடியேவேலெடுத்து ஆடிக்கொண்டாடிமாதப்
பௌரணைக்கேவரு வாரடி-யிங்கே
வருஷங்கள் தோறும்வெகு சீரடி ௩௬

வருஷங்கள்தோறுமிங்கே வருவாரானாலுஞ்சொந்த
மானகர்க்கேகினாலப் போதுகாண்-யிங்கே
தான்வேலெடுத்துவார தாருகாண் ௩௭

ஆருகாணென்றாய்புக ழேரும்புதுக்கணக்குக்
காகவந்தநகரத் தார்கள்-வெகு
சேகரமாகவரு வார்கள் ௩௮

சேகரமானகன யோகரெனுமிவர்கள்
செல்வமிருந்தவரோ தோணும்-நல்ல
கல்விமிருந்தவரோ காணும் ௩௯

கல்வித்திறமையுண்டு செல்வமகிமையுண்டு
கந்தனருளைப்பெற்ற பேருக்கே-வெகு
விந்தையாய்நாட்டுக்கோட்டை யாருக்கே ௪௦

நாட்டுக்கோட்டையாருக்கு தீட்டுபுகழ்படைத்த
நகரத்தாரென்றிவரைத் தானையா-யெங்கும்
சகலபேர்களும்சொல்வதேனையா ௪௧

சகலயாபாரதர்மஞ் சகலதிருப்பணியும்
தவறாமல்ச்செய்துவந்த தோதினால்-புவியி
லிவரேநகரத்தாரென் றோதினார் ௪௨

இவர்களைப்போலனேகர் யெவளவோதர்மஞ்செய்தார்
யேனையாகாணுமந்த நாளில்லை-அப்போ
தானவர்க்கந்தபே ரேனில்லை ௪௩

பேர்புகழ்சரிதைகிரிகை நேருங்குகனருளும்
பெற்றதினால்நகரத்தாரே-யென்று
யெத்தலத்திலுமுறைத் தாரே ௪௪

எத்தலத்திலும்புகழ் பெற்றமதுரைச்சொக்கர்
யிருக்குங்கோயிலையெல்லாந் தானையா-பொன்னால்
சிறக்கவலங்கரித்த தாரையா ௪௫

ஆரென்றாய்பெண்ணேயெங்கும் பேறானதென்மதுரை
ஆலையத்தைப்புதுப்பித்த தாரடி-வடி
வேலனருள்நகரத் தாரடி ௪௬

வேலணைப்பெற்றசத்தி வாலைசிவகாமித்தாய்
மேவுஞ்சிதம்பர நடேசனார்-சபை
யாவும்புதிப்பிக்கிற தாரையா ௪௭

புதிப்பிக்கவேணுமென்று மதிப்பித்துகந்துசெய்தார்
புவியில்ப்புகழ்நகரத் தாரடி-முகில்கள்
சுவியும்தண்மைபோல் கொடையாரடி ௪௮

கொடையார்கள் தர்ம்ம்செய்ய சடையாரோவாணிபத்தில்
கூடும்முயர்ச்சியுள்ள வாழ்வுளோர்-புகழ்
நாடும்வேதாகமத்தின் கேள்வியோர். ௪௯

நாடுமயோத்திகாசி ராமேஸ்வரம்வரைக்கும்
நகரத்தார் தர்மம்நிலை நாட்டினார்-நித்தியம்
சுபஜெயமங்களத்தைச் சூட்டினார். ௫௦

சூட்டியவர்க்கருளைத் தீட்டியவேலவர்மேல்ச்
சொன்னகவியெங்கும் பிரகாசம்-ஓகோ
மன்னவருமக்கெந்த தேசம் ௫௧

தேசமென்பதுராமன் சேதுபந்தனஞ்செய்த
சீமான்திருப்புல்லாணிதானடி-தங்கம்
ராமசாமியென்பது நானடி ௫௨

நானடிக்கடிகந்த நாதன்தனைப்பணிய
நல்லதினக்களெப்ப காணும்-அதைச்
சொல்லநாமிங்கேவரவேணும் ௫௩

சொல்லக்கேள் சுக்கிரவாரம் சோமவாரங்கள்மாதம்
தோதானகார்த்திகைக்கித் தானடி-வந்தால்
பாதகங்களகன்று போமடி ௫௪

பாதகந்தன்னைப்பரி காசமேசெய்யுங்கந்தன்
பாதந்தனைப்பணிய வேணும்-நாங்கள்
காதல்கொண்டேவருவோம் காணும் ௫௫

காணுந்தவமிருந்த கதிரைப்பதியுகந்த
கந்தன்செந்தூரில்வளர் யோகண்டி-நல்ல
தொந்தமிட்டாடுமயில் வாகண்டி ௫௬

வாகன்செந்தூரானென்றால் வையாபுரிபழனி
மாமலைமேலிருப்ப தாரு-நல்ல
சாமிமலைக்குகந்த தாரு. ௫௭

சாமிமலைமுதலாய்ப் பூமிதனிலுமுள்ள
தலங்களெல்லாமிவர் தாண்டி-மேவி
விளங்குங்கதிரைப்பதி யாண்டி ௫௮

ஆண்டிக்கிவ்வுலகெல்லாம் வேண்டியபதிசென்றால்
அத்தலங்களிலெதுகாணும்-இவர்
சித்தம்வைத்திருப்பதெங்கோணும் ௫௯

சித்தம்வைத்திருப்பது முத்தரெனுமடியார்
சிந்தையைவிட்டகல மாட்டார்-மாயன்
செந்திருவாழ்கதிரை நாட்டார் ௬௦

நாட்டாரடியவர்மேல் நாட்டமாயிருந்திட்டால்
நாட்டுப்பதிகளில்ச்செல்வாரோ-நாமும்
கேட்டவரங்கள்தருவாரோ ௬௧

கேட்டவரந்தருவார் நாட்டுப்பதியில்செல்வார்
கேசவன்தருமருகனார்க்கே-பெண்ணி
வாசமாய்நம்பிநடந் தோர்க்கே ௬௨

வாசமுடனேகதி ரேசனைத்தொழுதிட
வாருமையாபுகழலாலி-யினி
கூறும்ஜெயமங்கள வாழி ௬௩

வாழிகதிரேசனும் வாழிவள்ளிதெய்வானை
வாழியடியவர்கள்வாழி-யெங்கள்
மேழிக்கொடிக்குலமும்வாழி. ௬௪

கதிர்காமத்துவசல்.

முற்றிற்று.



கதிர்காமக்கும்மி.

சீர்வளம்பெற்றகுயில்க்கூவும் நல்ல
தென்கதிர்காமமதில்மேவும்
ஆறுமுகன்கதி ரேசனுமேலெங்கள்
அண்டர்கொண்டாடிய வாசனுமேல் க
மங்களம்சேரும் கும்மிப்பாடவந்து
மாணிக்கப்பிள்ளையார் காப்பாமே
சிங்கத்திலேறிய பூரணியேயெந்தன்
செந்தமிழ்க்கேயருள் நாரணியே உ
சுந்தரநீறணி ஆறுமுகன்மீதில்
சொல்லுந்தமிழுக்கு நாலுமுகன்
சிந்தைக்கிசைந்தவனை வாழ்த்திக்கவி
செப்பும்புலவர்களைப்போற்றி ௩
சந்தோஷமாய்க்கும்மிப் பாட்டுரைக்கக்கந்தன்
தையல்தெய்வானையுமேசிறக்க
வந்துதவிசெய்ய வேணுமம்மாநாளும்
வாழ்த்துங்கவிமாலை பூணுமம்மா ௪
கந்தன்கதிர்காம வேலனேபுவி
சார்க்குமறைமுத லோலனே
யெந்தனுக்கனு கூலனேதொழு
தேத்திப்பணியவும்சீலனே ௫

மங்கையரெல்லோரும் வாருங்கடியிந்த
மாணிக்ககெங்கைநீ ராடுங்கடி
சிங்காரமாய்ப்பணி பூட்டிக்கொண்டுமுகம்
சிறந்தகுங்குமம் திட்டுங்கடி ௬

கூந்தலுக்கேமலர் மாலைகட்டிநல்ல
கோலவர்ணப்பட்டுச் சேலைகட்டி
சோர்ந்திணையாகவே பாடுங்கடிகந்தன்
சேவடிபோற்றிக்கொண் டாடுங்கடி ௭

ஐயமில்லாமலே நாடிவந்தயிந்த
ஆறுமுகன்பதி தேடிவந்த
சேயிழைமார்களே வாருங்கடிகவிச்
சிறப்பைச்சொல்லுறேன் கேளுங்கடி ௮

ஓதியசெந்தமிழ்ப் பாடவேயிந்த
ஊர்வளஞ்சொல்லிக் கொண்டாடவே
யேதுபிழைக ளிருந்தாலும்சுவாமி
ஏழைக்கிரங்கி யென்னையாளும் ௯

ஆறுமுகமென்று பேருடையானென்னை
யாளும்கதிர்காமத் தூருடையான்
சீருடையான்வடி வேலுடையான்வெகு
சித்தர்கள்போற்றிய காலுடையான் ௧௦

சத்திக்குகந்த மகன்தானேயிவர்
தந்தையும்முக்கண் சிவன்தானே
யெத்திசையும்புகழ் மால்மருகன்றனை
யேத்திக்கொண்டாடலாம் வாருங்கடி ௧௧

வாசம்புகழ்கதிர் காமத்திலேமழை
மாரிபெய்யவுஞ்சந் தோஷத்திலே
ஆசைமிகுந்துழ வேத்தினர்சென்னல்
அள்ளிவயலெங்கும் தூத்தினர் ௧௨

சென்னல்களெல்லாம் விளைந்திருக்குமெங்கும்
சிங்களநாடு மகிழ்ந்திருக்கும்
கன்னல்தழைத்தெங்கும் முத்தீனும்பூங்
காவுகளெல்லாம் வளர்ந்தோங்கும் ௧௩

மாவுங்கொய்யாவு மடர்ந்திருக்கும்புன்னை
    மரம்பிலாவுந் தொடர்ந்திருக்கும்
கூவுங்குயில்மயில் கூட்டமும்வெகு
    குஞ்சரங்களெங்கும் நாட்டமும் ௧௪

கானகத்தில்மயில் ரொம்பவடிபுலி
    கரடிமான்மரைக் கும்பலடி
வானரங்கள்விளை யாடுவதுமெங்கும்
    வண்டுகள்கீதங்கள் பாடுவதும் ௧௫

மாணிக்ககெங்கையா ரோடுவதும்நிதம்
    மாதவர்வந்துநீ ராடுவதும்
காணிக்கைகொண்டு வருவாரோகதிர்
    காமத்தைநோக்கி வெகுபேரே ௧௬

வீதியலங்கார மெத்தவடியிதில்
    மேவுஞ்ஜனங்களும் சுத்தமடி
சோதிமயமான கோபுரமுங்கோவில்
    சூழ்ந்ததிருமதில் தாவரமும் ௧௭

குமரன்கோவி லிலங்குதுபாரிதில்
    கொட்டியமேள முழங்குதுபார்
அமரர்கூடிய கூடமும்வள்ளி
    யம்மைதெய்வானைக்கி மாடமும் ௧௮

என்னசொல்வேன்கதிர் காமத்தைகோவி
    லிலங்கியவலங் காரத்தை
சன்னிதிகாவலும் சிங்களவர்கோவில்
    ஸ்த்தானிகராவதும் சிங்களவர் ௧௯

நன்னகரெங்கினும் சிங்களவர்கோவில்
    நாட்டியக்காறரும் சிங்களவர்
மன்னனரசுக் குருந்தவர்கள்விட்ட
    மானியங்கள்ரொம்பப் பெற்றவர்கள் ௨௦

புத்தமதத்திலுகந்தவர்கள் கந்தன்
    பூசையில்நித்த மிருந்தவர்கள்
நித்தமும்சிங்களர் கூடுவதுமிவர்
    "நேர்ந்துபணிந்துகொண் டாடுவதும் ௨௧

தெய்வானைக்கேத்த மலர்கள்கொய்வார்லாட
தேசசன்னியாசிகள் பூசைசெய்வார்
வைபோகமிப்படி யுள்ளதடிஸ்தல
மகிமையைச்சொல்ல நல்லதடி. ௨௨

யெண்டிசைதோறும் புகழ்வாசன்தொழும்
யெங்கும்சிறந்த கதிரேசன்
கண்டியில்மேவிய தீரனடிகந்தன்
காலாயுதக்கொடி வீரனடி. ௨௩

செங்கைவேல்வில்லையும் பெற்றவண்டி அந்த
தென்னிலங்காபுரி மெய்த்தவண்டி
சிங்காரமாகிய வேலனடிஅவர்
சிறப்பைநான்சொல்லக் கேளுங்கடி. ௨௪

சிறப்பைச்சொன்னவ ரேகாணும்அந்த
தென்னிலங்கை யென்பதுதாணும்
யிருப்பதெந்தவிடங்காணும் அதற்
கெப்படிபோனால் தடந்தோணும் ௨௫

கண்டிகொழும்பு மிருப்பதெங்கேயிந்த
கார்கடல்மத்தியிலத் தீவுமிங்கே
உண்டானகாரணந் தானுமையா அந்த
உண்மையைச்சொல்லவும் வேணுமையா ௨௬

சொல்லுகிறேன்கேளடி முன்னாலேதேவர்
சொன்னசபதத்தால் முன்னாலே
வெல்லவேமாருதம் விசையிலேதள்ள
மேருமுடியிந்தத் திசையிலே ௨௭

வந்துவிழுந்த யிடமாச்சுயிந்த
வாரிக்குமேலே திடலாச்சு
உந்திக்கமலத் துதித்தவருங்கண்டு
உள்ளத்திலெண்ணி மதித்தவரும் ௨௮

ஏழுசுற்றுக்கோட்டை யாக்கியேயிதற்
கிலங்கையென்னும் பேர்தாக்கியே
ஆளுமென்றுமன நற்பாலேசொல்லி
ஆண்டகுபேரனுக் கிப்பாலே ௨௯

ராஜுவத்தோடே ஜெயம்பூண்டான்மன்னன்
 ராவணன்தென்னிலங்கை யாண்டான்
போனதிரையதா யுகத்திலேவந்த
 பொற்கொடிசீதையை வனத்திலே ௩0

கண்டுசிறையெடுத் தோடிவந்தான்ராமன்
 கவிப்படையுடன் தேடிவந்தான்
நின்றுகடலைக்கண்டே திகைத்தான் அந்த
 நேரம்வருணனை யழைத்தான் ௩௧

சீதையினாலே மனமுகந்துராமன்
 தெர்ப்பாசயன மதிலிருந்து
ஆதிசேதுவெனப் பேர்பொருதிக்கன்னி
 யாகுமரியெல்லை கண்டறுதி ௩௨

பரப்பிலேபத்து யோசனையாய்க்கவிப்
 படைமலைகொண் டதர்க்கிணையாய்
உரத்துயோசனை நூறுமட்டும் அணை
 உண்டுபண்ணிலெங்கைக் கோட்டைமட்டும் ௩௩

நடந்துலெங்கையைக் கண்டபின்புராமன்
 ராவணனைக்கொன்று சென்றபின்பு
அடர்ந்தராக்ஷதக் கும்பழியதிரு
 வணைசிதறுண்டு தான்மறைய ௩௪

பின்னுலிலங்கையைச் சீராக்கித்தவப்
 பெருமையால் கொஞ்சம்பேராக்கி
அன்னாள்விபீஷண னுண்டுவிட்டார்பின்பு
 அண்டருலகத்தைச் சார்ந்துவிட்டார் ௩௫

காட்டமுள்ளகயல்க் கண்ணாளேலெங்கை
 நகரம்நாள்ச் சென்றுபின்னாலே
கோட்டையழிந்து கடலாச்சுயிது
 கொஞ்சமாய்த்தீவிங்கே துண்டாச்சு ௩௬

அப்பாலித்தீவு சீரில்லாமல்யிதில்
 ஆளவொருவரு மில்லாமல்
ஒப்பிலாதகாடு மலையாச்சுபெரி
 யோர்களுலாவு மிடமாச்சு ௩௭

நயமிருந்த பெருங்காடுவெகு
நாளாயிருந்ததின் பிற்பாடு
யியக்கரென்றொரு ராட்சதனும்யிதில்
யிருந்தரசிட்டான் யேச்சவனும் ௩௮

நத்தியேநாகர் சிலகாலம்மேல்
நாட்டையுமாண்டு வருங்காலம்
புத்தரும்வந்திதில் நாடினர்சிலர்
புத்தர்மதத்தைக் கொண்டாடினர் ௩௯

திசைபுகழ்வங்க தேசாதிராசன்
சிங்கவாகுபெத்த ஞாயாதி
விஜையராசனும் வந்தாண்டிபூமி
விஸ்தாரங்கண்டு மகிழ்ந்தாண்டி ௪0

தலைமன்னாரென்று பேட்டைகட்டிராஜன்
தம்பனைநாடென்று கோட்டைகட்டி
சிலைவலிமையைக் கொண்டாடக்கண்டு
தென்னனியக்கர் மகள்கூட ௪௧

செப்பமுடனிதை யாளவந்தான்வங்க
தேசத்ததிபன் மகனிவன்தான்
அப்பாலித்தீவுக் கரசரடிவந்து
ஆண்டவர்கள் வெகுபேர்களடி ௪௨

வங்களர்சிங்களர் வெள்ளாளர்யிந்து
மதசமையத்து வள்ளாளர்
யிங்கேவந்துகுடி யேறினர்யிதர்க்
கிசைந்தரசரு மீறினர் ௪௩

சிங்களப்பாஷையு மேலாச்சுயிதில்
சிவசமையமு முண்டாச்சு
மங்கையரேசில ராஜாக்கள்புத்து
மதசமையத்தை மேலாக்க ௪௪

பாண்டிசோழதேசத் தீரர்களும்வந்து
பட்டமாண்ட முடிவீரர்களும்
வேண்டியகோட்டைகள் கட்டிக்கொண்டார்மதம்
வேறுசெய்யசண்டை யிட்டுக்கொண்டார் ௪௫

பாவையேயெங்கும் நகராச்சுநல்ல
பாருலகத்திலே பேராச்சு
மேவும்சிவஸ்தல மெத்தவுண்டியந்த
விஸ்தாரஞ்சொல்லவு முத்தியுண்டு சசு

உன்னிதமான மலையுமுண்டியிதில்
வோங்கும்சிவனடி பாதமுண்டு
முன்னீஸ்புரம்வெகு முக்கியமாம்அதில்
மூலகணேசன் சிலாக்கியமாம் சஎ

கேட்டவர்க்கேயனு கூலமாம்திருக்
கேஸ்புரமென்றொரு தானமாம்
நாட்டமுள்ள நகுலேஸ்புரமாம்சிவ
நாதனுகந்த கோணேஸ்புரமாம் சஅ

தண்டேஸ்புரம்வெகு தகுதியாம்ஐயன்
சாத்தாக்கோவிலொரு பகுதியாம்
எண்டிசைமொய்த்த குமரபுரம்புக
ளிலங்கும்சந்திர சேகரபுரம் சகூ

கண்டவர்மெய்த்த மர்விட்டபுரம்ராஜ
கர்த்தரால்செய்த தனேகபுரம்
தொண்டர்துதிக்கும் தலங்களிதாம்யின்னம்
தோணுதிருப்ப தனேகமதாம் ருo

ராமேஸ்புரமிதைச் சேர்ந்ததடிமுன்னே
ராமனுதனு லமைந்ததடி
பூமிக்குருத்தரன் மன்னர்மெத்தபட்டம்
பூண்டரசிட்ட நகரமெத்த ருக

கண்டியென்றும் கோட்டைக்காடிதென்றுநல்ல
கழனிநீர்கொழும் பூரிதென்றும்
அண்டியவூரெல்லாம் கட்டடமாம்கோட்டை
அனுராச புரபட்டணமாம் ருஉ

முத்துச்சலாவத் துறையுமுண்டுகடல்
முழுகிச்சங்கு குளிப்பதுண்டு
ரெத்தினபுரியென்று ஊருமுண்டுஅதில்
ரெத்தினமணிகள் விளைவதுண்டு ருங

பன்னகாமம் தும்பறைநாடாம்யாழ்ப்
பாணப்பகுதி வெகுநாடாம்
இன்னமிருக்குதனேக மெல்லையிப்ப
யெனக்குச்சொல்லச் சமையமில்லை ௫௪

கண்டவிடமெல்லாம்மூராச்சுகோவில்
கட்டியக்கட்டடம் பேராச்சு
திண்டுமுண்டாப்பளி கொண்டார்கள்நல்ல
சிங்களரோடர சாண்டார்கள் ௫௫

கண்டியையாண்டிடும் வீரதுங்கன்யிதில்
கட்சிவிக்ரம ராஜசிங்கன்
தண்டிகையேறிய சூரர்களும்யிவன்
தலைமுறைவரை ராஜர்களும் ௫௬

தொண்ணூத்தாறுமுடி மன்னரடிஅதைச்
சொல்லுஞ்சரித்திர மின்னமடி
விண்ணவர்மெய்த்திடு மானகரில்யிதில்
மேவியரசிட்ட பேரவரில் ௫௭

கண்டிக்கரசனும் பின்னாலேஅவன்
கட்டடம்காணலாம் கண்ணாலே
வண்டனதியாய்க் காரனடிஅவன்
வம்மிஷம் நாய்க்கராஜனடி ௫௮

அதற்குமுந்தியராஜர் தொட்டுக்கட்டி
ஆண்டவிடமெல்லாம் சீருகெட்டு
மதிப்பதர்க்கிடந் தோணாமல்க்காடு
மண்டியிருப்பதும் தானாமே ௫௯

இங்கிர்தன்வீரத்தில் சூரசிங்கன்யிந்த
இலங்கைநாடெல்லாம் ராஜசிங்கன்
சங்கையுடனர சாளையிலேசீமை
தன்னிலிருந்த வேளையிலே ௬௦

சிங்காரக்கப்பலில் பறங்கியேயிந்த
தீவுக்குள்ளே வந்துயிறங்கியே
தங்கச்சிகரம் தனைவகுத்துப்புத்தர்
தாவுங்கழனித் திசையடுத்து ௬௧

கோட்டையுங்கட்டிக் கொடிபூட்டியதைக்
கொழும்பென்றுசொல்லி பேர்நாட்டி
வேட்டெழுப்பிக்காலிக் கோட்டைகட்டிநல்ல
விஸ்த்தாரமாத்திர பேட்டைகட்டி ௬௨

தொட்டதிருக் கோணமாமலையும்அந்த
துறைமுகங்களை யாண்டதையும்
ஒட்டாமல்தள்ளி விரைவாகவந்து
உலாந்தாக்காற ருசாராக ௬௩

ஆண்டுசிலகாலம் விட்டாகள்பின்பு
ஆங்கிலேயர்வந்து தொட்டார்கள்
வேண்டியதர்மம் நிலைநிறுத்தயிந்த
மேதினியையெல்லாம் சீர்திருத்த ௬௪

கும்பனியார்வந்து ஒட்டிக்கொண்டார்யிந்த
கொழும்புகோட்டையைக் கட்டிக்கொண்டார்
வம்பானகாட்டையும் வெட்டலுற்றார்கோடு
வங்காளக்கச்சேரி கட்டலுற்றார் ௬௫

கண்டியரசனைக் கெடுத்திட்டார்பெருங்
கள்ளர்களைச்சுட்டு யழித்திட்டார்
வண்டிக்கிறோட்டுக ளுண்டுபண்ணியிதில்
மாகாணங்களாய்த் துண்டுபண்ணி ௬௬

துறைமுகங்களை நேராக்கிகாப்பித்
தோட்டங்களை யெல்லாம்சீராக்கி
நிறையயிந்தியாச் சனங்களும்ரேகு
நிறைந்ததீர்வைப் பணங்களும் ௬௭

மின்னல்வேகங்கொண்ட தந்திவைத்தார்பேசி
விளம்பும் ஆபிசை முந்திவைத்தார்
என்னசொல்வேனடி மின்னாரேயிந்த
இங்கிலீஷ்க்காரர் தன்னாசே ௬௮

பூட்டிறயிலையும் நடத்தினார்யெங்கும்
புகைவிளக்கையும் பொருத்தினார்
தாஷ்டிமான கடலலைக்கியூடே
தடுத்தணைகட்டியே நெருக்கி ௬௯

தண்டவாளச்சூட்சம் வைத்தாரே மலைத்
தண்ணீரைவாவென் றழைத்தாரே
மண்டலத்தில்புகழ் பெற்றதடிகப்பல்
வாறதனேகமாய் நித்தமடி. எ0

தண்டமிழ்சேர்புவி மெய்த்தவளாய்யிந்தி
சக்கரவர்த்திம்பட்டம் பெற்றவளாம்
லண்டனரசாட்சியைச் செலுத்தும்மகா
ராணிகட்டளைப்படி நடத்தும். எக

இங்கிலீஷ்காறரா லேயல்லோநம்ம
இந்தியாவும் லெங்கைத்திவுமல்லோ
கங்கையும்சிங்கார முண்டாச்சுவெகு
தாழ்வில்லாவாழ்வுக ளுண்டாச்சு. எஉ

பூமியில்கள்ளர் பயம்போச்சுவெகு
புத்தியும்வித்தையும் மேலாச்சு
சாமிகதிரேசன் தன்னருளால்ஒரு
தாழ்வொன்றுமில்லையே தோழிப்பெண்ணே. எங

தாழ்வில்லாத்தன்மை யுடன்வாழும்கவி
சாற்றியமன்னவ ரேகேளும்
ஆழுங்கதிரேச னித்தலத்தில்வந்த
ஆரம்பத்தின்கதை சொல்லுமையா. எச

ஆரம்பமென்ன புராணத்திலேகதை
அறிந்தமட்டு மின்னேரத்திலே
கூறவுங்கேளுங்கோ பெண்ணுரேவர்ன
கோலவிழிக்கயல்க் கண்ணுரே. எரு

அண்டமெல்லா மொருதகத்திலேகட்டி
ஆண்டகிரேயதா யுகத்திலே
கொண்டரசாட்சியைச் செலுத்தியேதேவர்
கோனைவெருட்டியே கொளுத்தியே. எசு

பாரவினைகளுக் கொஞ்சாதவெகு
படைபெருக்கத்துக் கஞ்சாத
வீரப்பிரதாப மிகப்பூண்டமன்னன்
வீரமயேந்திர புரமாண்ட. எஎ

வாசமுள்ளசூர நாளையிலேஅவன்
வந்துபோர்செய்திடும் வேளையிலே
பாசறைவீடுமிதில்த் தாண்டிகந்தன்
படைப்பெருக்க மிதில்தாண்டி. எஅ

குன்றெனுஞ்சூரரைத் தாக்கினார்தேவர்
கோனுக்கரசை யுண்டாக்கினர்
அன்றுமுதல்கந்தன் வாசமடியிதில்
அண்டர்களும் விசுவாசமடி. எகூ

காமன்மைத்துனனைத் தொண்டுபண்ணிகதிர்
காமமென்றபேரை யுண்டுபண்ணி
மாமுனிவோர்கள் கொண்டாடிவந்தநம்ம
வள்ளிமணாள னிவன்தாண்டி. அ0

மன்னவரேகவி சொன்னவரேயிங்கே
வாருமையாசொல்லக் கேளுமையா
மின்னியவேலவரை வாழ்த்தமுறை
விளங்கச்சொல்லும் பணிந்தேற்ற. அக

விளங்கும்தீப தெரிசனமும்தவில்
மேளம்தவண்டை முற்சினமும்
முளங்கும்சன்னதி முன்பாகச்சென்று
மூலஸ்தானத்தைப் பாருங்கடி. அ௨

மூலஸ்தானந் தெரியாமேசபை
முன்னஸ்தமண்டபம் தோணுமே
சீலமிகுகந்தன் சன்னதியிலிட்ட
திரைமறைப்பிங்கே யேதுக்கையா. அ௩

திரைமறைப்பு வளமையடிகந்தன்
சேவடிகாண்ப தருமையடி
முறைதெரியாத மானிடர்க்குக்கந்தன்
முன்மணிவாசலுந் தோணுது. அ௪

முன்மணிவாசல் கடக்கணுமேசுவாமி
மூலஸ்தான மடுக்கணுமே
நன்மையுகந்த கதிரேசன்தனை
ஞானியவகை சொல்லுமையா. அ௫

நானுமறிந்தது மில்லையடிசொன்ன
நம்புவியோயெந்தன் சொல்லையடி
தேனருந்தவழி தோணுவிட்டால்கந்தன்
சேருவைகாண முடியாது. ௮௬

சேருவைகாண முடியாட்டால்யிந்தச்
சிங்களவரெனும் ஸ்தானிகர்கள்
ஆறுமுகவ னறியாமல்நிதம்
ஆருக்கலங்காரம் செய்வார்கள். ௮௭

ஆருக்கென்றால்வர்னப் பேழையொன்று அதற்
கன்புற்றலங்காரம் செய்துகொண்டு
பாரியகேடக மீதேற்றிவீதி
பவனிவாரது முண்டுமடி. ௮௮

பவனிவந்திடும் பேழையதுயென்ன
பாவினையாலே சமைந்தது
அவனியெல்லாம் புகழ்ந்தேற்றபேழைக்
கருள்நிறைந்தது மெவ்விதங்காண். ௮௯

அருள்நிறைந்து சமைந்தவிதத்தைவெகு
அந்தரங்கமிந்தப் பெட்டகத்தை
குருவறிந்து துலக்காட்டால்கண்டு
கொள்ளமுடியாது வள்ளலையே. ௯0

வள்ளலுகந்திடும் கோவிலுக்குமுழு
வச்சிரத்தட்டோடு போடாமல்
தென்னியமாமணி மேடையெல்லாம்செய்து
செப்போடிட்டது மேதுக்கய்யா ௯௧

செப்போடல்லவே தோழியரேயிது
சிவந்தபத்தரை மாத்தாகும்
ஒப்பாதபுவி மானிடர்க்குயிது
செப்போடாகவே தோணுமடி ௯௨

செப்போடிட்டதை மாத்தையிலேபின்னும்
சீர்திருத்திவரி யாத்தையிலே
அப்போதங்குள்ள மூலஸ்தானத்தை
அறிந்துகொள்ளாரோ சொல்லுமையா ௯௩

அறிந்துண்டைய னுத்தரவால்பன்னி
ராண்டுக்கொருதர மாத்தினவர்
உரியசுத்தமவுனங் கொண்டுசமாதி
யுகந்தடைந்தவர் கோடியுண்டு. ௯௪

கோடிபேருண்டென் றும் சொன்னவரேகந்தன்
கொலுவின்மகிமையும் சொன்னவரே
தேடிக்கொண்டாடும் கதிர்மலைமேல்கந்தன்
சேருவைச்சேகர மெப்படிகாண். ௯௫

சேகரமான மலைகளுண்டுசுத்தி
திரண்டுருண்ட வனங்களுண்டு
ஏகமிருக சஞ்சாரமடிமலைக்
கிசைந்துபோனவ ரில்லையடி. ௯௬

போனவரந்தமலை வளத்தைச்சொல்லி
புகழக்கேட்டே னதின்விதத்தை
ஆனாலவரெப்படிப் போனார்போக
லாகாதென்றெவ்விதம் சொல்லுவீர்காண் ௯௭

ஆகாதென்றது மெய்தாண்டிமுரு
கையனுத்தரவி னால்த்தாண்டி
யேகினாலந்தக் கதிர்மலைக்கிவழி
யிசையத்தோணு மிருள்விலக்கி. ௯௮

யிசையும்நல்ல வழியுமென்றீர்முன்னே
யேகமிருகசஞ்சார மென்றீர்
திசைக்கிச்செல்லாமல் தட்டிடுமோகண்டு
சேரும்படிவழி விட்டிடுமோ. ௯௯

விட்டுவிடாதது மெய்யாதர்க்கேகதிர்
வேலவனுத்தர வானவர்க்கே
தட்டுப்படாதுமிருக மெல்லாம்வனம்
தாண்டியேயேறி நடந்திடலாம். ௱

நடந்துகாணுவ தெந்தமலைகந்த
நாதனிருப்பது மெந்தமலை
அடர்ந்தமேளத் தொனிகளுண்டோயங்கே
அண்டர்கள்கூட்ட மதிகமுண்டோ. ௱௧

அண்டர்கள்கூட்ட மதிகமுண்டுஅப்பால்
ஆறுமுகன்சபை யங்கேயுண்டு
கண்டாசைகொள்ளாத மானிடர்க்குசபை
காணவுந்தோணாது தோழிபபெண்ணே. ௩௨

தோணுதென்றது மெய்யவரும்இருள்
சூழ்ந்தவனங்கள் கடந்தவரும்
காணுதமாமலைக் கேறினவர்சபை
கண்டுதொழாமல் வருவாரோ. ௩௩

கண்டுதொழுவ தெல்லாமலையும்யெங்கள்
கந்தன்கனக சபைமலையே
தொண்டரல்லால்க் கண்டபேருமில்லை அங்கே
துடிவயிரவன் காவலடி. ௩௪

காவல்கொண்டமலைச் சார்பினிலேயெங்கள்
கர்த்தன்பவனிப் பதியினிலே
மேவும்சமாதியொன் றிருக்கிறதேயதை
விளங்கச்சொல்லு மெனக்குமதை. ௩௫

சொல்லுவேன்கேளு திரைகடந்தயோகத்
துரியாதீதத் துரைகடந்த
நல்லமுத்துலிங்க சுவாமிக்கடிமுந்தி
ராஜரால்கட்டிய கோவிலடி. ௩௬

கட்டியகோவில்ச் சிறந்ததிலேகதிர்
காமம்சிவஸ்தல மானதிலே
முடிவணங்கி முகையதீனென்கிற
முழக்கமேதிங்கே சொல்லுமையா ௩௭

முழக்கமான நபிவரத்தில்வந்து
முத்தியடைந்தன ரித்தலத்தில்
வழக்கமாக முசிலீன்கள்நிதம்
வந்துவணங்குந் தீன்சத்தமடி. ௩௮

தீனதுகூறிய மாபதியில்நல்ல
சித்திரவேலவன் சன்னதியில்
தானமும்தர்மமும் செய்யவென்றுயன்ன
சத்திரம்கட்டின தார்காணும். ௩௯

கட்டியமாமடம் கெட்டியடிதர்ம
கர்த்தரெனும் நகரத்தார்கள்
ஒட்டியபொதிகை யிட்டமைத்தார்புக
ழுயர்ந்ததர்ம மடம்சமைத்தார் ௧௧௦

உயர்ந்தர்ம மிகுத்தோர்கள்செல்வ
மோங்கும்வசிய குலத்தார்கள்
இசைந்துவந்த வரைக்கீதடியன்னம்
ஈவதுமுண்டோ மனம்நாடி. ௧௧௧

நாடியதர்ம மிகக்கொடுத்துகந்த
நாதன்கதிரேசன் வேலெடுத்து
ஆடித்திருவிழா நாளையிலேயிவ
ராண்டுக்கொருதரம் வாறதுண்டு. ௧௧௨

வாறதுண்டுநக ரத்தார்களென்று
மன்னவரேசொன்னீ ரின்னகரில்
ஆறுமுகன்கதிரேசனுக்குயிது
ஆடித்திருவிழா முக்கியமோ. ௧௧௩

முக்கியமாய்க்கதிர் காமத்திலேசுற்றி
முக்கோணசக்கர வீதியிலே
சக்கரபாணி மருகரெனும்கந்த
சாமிதிருவிழாக் கூட்டமடி ௧௧௪

கூட்டமும்பாட்டமும் கொண்டாடும்குடை
கொடிவிருதுகள் நின்றாடும்
நாட்டமுடைய திருநாளில்நிதம்
நடக்குகின்ற வளமையென்ன. ௧௧௫

வளமைவேழத்தின் மேலிருந்துகந்தன்
மாணிக்கப்பேழை தணிலுகந்து
கலைதுலங்கிய வீதியிலேவரும்
கந்தன்பவனியைப் பாருங்கடி. ௧௧௬

கந்தனுக்கேத்த திருநாளிலிந்தக்
காசினியோரும் வரும்நாளில்
செந்தமிழோர்களும் கொண்டாடக்கந்தன்
தேருமேலேறுவ தென்றைக்கையா. ௧௧௭

தேறுமேலேறும் வளமையில்லேச்சித்திர
 தேருமிழுப்பது மிங்கேயில்லை
நேருடன் தண்டிகை மீதேறிசுவாமி
 நீரறுப்பானதைப் பாருங்கடி. ௧௧௮

நீரறுப்பென்றதும் தோன்றிலேயேயிப்போ
 நீர்சொன்னபாஷை விளங்கிலேயே
தேறுமின்னுட்டு வளமைகளோயிதைச்
 சீருடனேசொல்ல வேணுமையா. ௧௧௯

சீருள்ளமாணிக்க கெங்கையிலேசுவாமி
 தீர்த்தங்கொடுத்தருள் செய்யயிலே
நேருள்ளசிங்களப் பாஷையிலேயிதை
 நீரறுப்பென்பதும் மெய்தாண்டி. ௧௨௦

மெய்யானஆறு முகவரெனும்சுவாமி
 மேவியவள்ளி தெய்வானையெனும்
தையலர்மேவும் கதிர்காமம்தனை
 தான்கண்டபேருக்கு முத்தியுண்டோ. ௧௨௧

முத்தியுண்டுகினைத் தாலுமடிதவ
 முத்தர்புகழ் கதிர்காமம்வந்தால்
சித்தியுமுத்தியு முண்டாகும்பிணி
 சேராதருள்வார் முருகேசன். ௧௨௨

கேசவன்தன்னரு மைக்குரியவள்ளிக்
 கிசைந்தகந்தன் புகழ்புரிய
வாசமிகுந் தமிழதனைச்சொன்ன
 மன்னவரே யுமக்கெந்தவூரு. ௧௨௩

மன்னர்புகழ்ராம நாதபுரம்சேது
 மானகராம திருப்புல்லாணி
நன்னயமாகிய ஊர்தாண்டிதங்கம்
 ராமசாமியெந்தன் பேர்தாண்டி. ௧௨௪

பேரையும்ஊரையு மேபுகழ்ந்துசொன்ன
பேர்பெற்றமானகர் மீதிருந்து
தாருலவுங்கதிர் காமத்துக்கேகீரும்
தானிங்கேவந்த வயணமென்ன கஉரு

வந்துகொழும்பத னில்சிறந்துவெகு
வாசமதாய்ச்சில நாளிருந்து
கந்தன்பவனியைக் கண்ணாலேகண்டு
கைதொழுதேத்தவும் வந்தேனடி. கஉசு

கைதொழுதேற்றிய மெய்வாசன்நம்ம
கந்தன்கதிரை முருகேசன்
தெய்வானைவள்ளி மணாளனுமேலினி
செந்தமிழால்துதி சொல்லுமையா. கஉஎ

சொல்லசொல்லச்சொல்லிக் கேட்டவர்க்குவரும்
துன்பமகற்று மிப்பாட்டவர்கரும்
தில்லையெல்லைவல்லத் தாண்டவத்தான்வாலை
தேவிசிவகாமி யின்தவத்தால் கஉஅ

அருள்பொருந்திய பூவரசன்வள்ளி
யம்மைதெய்வானைக் கதிரேசன்
திருவிழாவிற் சிறந்தவராம்கந்தன்
தீர்த்தங்கொடுத்தருள் தந்தவராம் கஉகூ

தீராதநோய்களை தீர்த்தவண்டிசுவாமி
சித்தம்வைத்துநம்மைக் காத்தவண்டி
நாரணனுக்கு மருகனிவன்ஜெக
நாதன்செந்தூரு முருகனிவன் கஙO

தேவசேனாபதி தாண்டிகூடவும்
சித்திரச்சேவல்க் கொடியாண்டி
மூவர்புகழ்கந்தன் சன்னதியில்நின்று
முழங்கிக்கும்மி யடியுங்கடி. கஙக

சிம்மாசனத்தி லிருந்தவரைவளம்
சேர்கதிர்காம முகந்தவரை
யிம்மானிலத்தவர் போற்றியே அவ
ரெண்ணிவந்தபடி யேத்தியே ௧௱௨

செலுந்தும்வேடிக்கை பாருங்கடிகந்தன்
தீபதெரிசனம் பாருங்கடி
தலத்தில்முக்கியம் மெத்தவடி கந்த
சாமிக்கிசிங்காரம் நித்தமடி ௧௱௩

முப்பத்துமுக்கோடி தேவருக்கும் நல்ல
மூவருக்குப்புவி யாவருக்கும்
நாற்பத்தெண்ணாயிரம் தானவர்க்கும்தரு
நாவலர்க்கும்திசை காவலர்க்கும் ௧௱௪

சிங்காரக்கும்மி தமிச்சிறக்கும் நம்ம
செங்கைவேலன் கதிரேசனுக்கும்
மங்கையர்வள்ளி தெய்வானையர்க்கும்ஜெய
மங்களம்வாழி மிகவாழி ௧௱௫

சித்திரவேலாயுதம் வாழிகந்தன்
சேவல்மயிலு மிகவாழி
சத்தியருள்கந்தன் சன்னதியில்ப்புகழ்
சாமிபிடும்பனும் வாழியதாம் ௧௱௬

கதிர்காமக்கும்மி

முற்றிற்று.

உ

சிவமயம்.

மங்களம்.

ஆதியாம்பரஞ் சோதிக்கும் அபிராமிக்கும்
ஜெயமங்களம்
மாதுவள்ளி தெய்வயானைக்கும் வடிவேலர்க்கும்
சுபமங்களம்

இநவுக்கும் திருமாலுக்கு தெய்வதேவர்க்கும்
ஜெயமங்களம்
குருவுக்கும் குமரேசர்க்கும் குறமாதுக்கும்
சுபமங்களம்

மாலருள்பிரம்ம தேவர்க்கும் கலைமாதுக்கும்
ஜெயமங்களம்
அலைசூழ்கதிர்காமம்வாழ் முருகையர்க்கும்
சுபமங்களம்

செந்தமிழ்க்கவி யாளர்க்கும் புவியாளர்க்கும்
ஜெயமங்களம்
கந்தனாறு முகன்வேல் முருகையர்க்கும்
சுபமங்களம்

மங்களம்-முற்றிற்று

உ

பரமபதிதுணை.



திருப்பரங்குன்றம்

சிவசுப்பிரமணியக்கடவுள்பேரில்

காவடிச்சிந்து.

தென்பறக்குன்றுறைவேலா அருள்சிலாஉமைபாலா செப்புஞ்
செஞ்சொற்றமிழ்க்கனுகூலா வள்ளி
தெய்வயானையினுடனேமகிழ் மயில்வாகனமதிலேறியே
சீக்கிரங்கண்பாராய்குகனே வினை
நீக்கிடுவாய் அறுமுகனே (க)

மூவுலகோர்கள்கொண்டாட அன்பர்நாடசூரர்தேடமுத்துக்
குமாரசுவாமிதமிழ்பாட வரும்
முத்தாகியவித்தே தெரிசித்தேனகம்வைத்தேன் துயர்
முற்றுந்தவிர்த்திடுவாயே யெனத்
குற்றமாதாபிதாநீயே (உ)

மெத்தக்கவலைகள் தாங்கி மனதேங்கித்துயரோங்கிப் பம்
மிக்கஅவஸ்தைகள்நீங்கி நாளும்
விரைசேரெழில்பதமேதொழ மிகவேஅருள்புரிவாய்கதி
வேரெனக்குண்டுமோதாதா குன்றில்
மேருங்குருபரநாதா (௩)

சாண்வயிற்றுக்கிரைதேடி பெங்கும்ஓடிபொருள்நாடிமாதர்
தன்வலையுள்பட்டுவாடி தினந்
சனிபோலவருவினையாவையு மணுகாமலேயெனையாதரி
சங்கரன்பெற்றருள்பாலா வள்ளி
இங்கிதமுற்றருள்வேலா (௪)

ஆறுமுகமும் உன்வேலும் தண்டைக்காலும்புரிநூலும் அடி
யேன்மறவாமலெக்காலும் என்னை
அருளும்படிநாளுந்துதி பாடும்பசு நீவந்தருள்
ஆனைகுறததிமணாளா தெய்வ
யானையும்மெய்த்தகுணாளா (௫)

எங்குமுனதன்பர்கூட்ட மூர்த்தன்நாட்டம்துதியீட்டம் கடல்
இரையும்முரசெனக்கோட்டம் தங்கும்
எழில்வேலணிபெருமானை திருவாலயமதிலேவரும்
ஏற்றும்சந்துவரைக்கோனே தினம்
போற்றுவேனுனைத்தானே (௬)

கதிரவன்நேரேகோபுரமும் கொடிமரமும் கந்தன்வாமும் கந்த
புஷ்கரணியுன்றன்உறமும் தன்னைக்
கண்டால்வினையுண்டோஎம ணண்டான்எனவென்றேமறை
கருதுஞ்சிலப்பணிபாதா என்னைக்
காத்துரக்ஷிக்கலாகாதா (௭)

தென்னைபுன்னைநெல்லிமாவும் புஷ்பக்காவும்குயில்கூவும் இளஞ்
தென்றலுமாமயில்தாவும் செங்
திருவாழ்வசந்தமண்டபக் கொலுமேவுமென்னழியில்சுந்தரத்
தேவாசிதேவாயின்னேரம் சிறி
யேன்வினைதீர்ப்பதுன்பாரம் (௮)

அழியாவரம்பெற்றசூரன் மிகுவீரன்வெகுதீரன் வானில்
அண்டரைவாட்டுமோங்காரன் தன்னை

ஆறுமுகமுடனேசெய அமராடியதுரையேகட
லாடுஞ்செந்தூரில்வந்தாயே வடி
வேலுங்கைகொண்டருள்நீயே (௯)

கருதுமெய்யர்க்கெல்லாமெய்யா பன்னிருகையாமுருகையா வேழை
கைவிடலாமோசொல்லையா நாளுங்

கார்த்தாள்வினைதீர்த்தாள்முகம் பார்த்தாள்தயைசேர்த்தாள்செழு
கரும்புதின்னக்கூலியுண்டோ நின்னை
விரும்புவோர்க்குக்கலியுண்டோ (௰)

வைகாசிமாதம்விசாகம் சுகவாசப்விசுவாசம் அங்கே
வந்திடுபேர்க்கருள்வேசம் திகழ்

வடிவேலுவரைபெருமானருள் குருவேபிணியணுகாமலே
வந்திடுவார்ஜனக்கூட்டம் அருள்
தந்திடுவாரெனத்தேட்டம் (௧௧)

மானைக்கலைமுனிபுணர்ந்தார் வழிகடந்தார் அருள்புரிந்தார்வள்ளி
கானகத்தின்குகைபிறந்தார் தினை

வனவேடரையேமாற்றியே மணமங்கையுடன் கூட்டியே
வந்தவர்வேலவர்தானே வள்ளி
மாமுனியின்புத்திரிதானே (௧௨)

ஆறுமுகவடிவேலா அருள்சீலா குணபாலா வுந்தன்
அன்பர்களுக்கனுகூலா என்னை

அன்பாகவேகொண்டோர்வினை கண்டேதுயர்விண்டோடவே
கானமயிலின்மீதேறி கடைக்
கண்ணினால்பார்த்தருள்மீறி (௧௩)

வள்ளிக்கிணையானவேலா குணசீலாகுருபாலா அருள்
தந்திடுவாய்வடிவேலா என்னை

அன்பாகவேகாத்தேயருள் தந்தேதுயர்தீர்ப்பாயென்னை
ஆடினேன்நின்முன்னேதானே பான்
பாடினேன் உன்னடியேனே (௧௪)

ஆனந்தக்களிப்பு சிந்து.

திருவருளும் கமலமுகத்தோனே உன்மேல்நானே
சிந்துதானே சொல்லத் திருவடியை
அனுதினமும் தெரிசனஞ் செய்வேனே (க)

அருள்பெருகும் குமரகுருபரனே அருள்
சிரனே அம்பர்பரனே சூரர் அசுரருடன்
பொடிபடவே கனவேல் தொடுகோனே (உ)

தங்கவளை யிங்கிர்தருளா மங்கைலோ
செங்கைவேலா கிருபை கருணைதரும்
அருணகிரி கடவுள் அருள்பாலா (ங)

பொங்குபுகழ் கைலாசபதியான் செம்புநிதியான்
சிம்பகதியான்தேவர் திருஞானசம்பங்கர்
ஆதிசிவ துதியானே (ச)

வேறு சிந்து

தந்தனத்தானனே தனதன தானத்தானனே

ஆறுமுகவேலா அநுதினம் காருமனுகூலா
தெருஞ்சிவயோகா குருபரன்தேசிகமால்மருகா (க)

சத்தியருள்பாலா அருள்தரும் வெற்றிவடிவேலா
முத்தியநுகூலா பரஞ்சோதி முக்கண்ணன்தன்பாலா (உ)

கங்கையணிநாதர் அருளிய செங்கைவடிவேலா
மங்கைஉமைபாதம் பணிந்திடும் துங்கமயில்நீதா (ங)

ஆதியுமந்தமும்நீ அருள்தரும் சோதியும் தொந்தமும்நீ
நாதியநாதியும்நீ தினம்புகழ் நியாதியும்சோதியும்நீ (ச)

கந்தன்முருகேசன் சரவணன் கானவள்ளிநேசன்
தந்தைக்குபதேசன் பதந்தரும்செந்தில்நகர்வாசன் (ரு)

வானவர்கள்போற்றி பணிந்திடும்தானவனும்நீயே
மோனதபாபரனே வள்ளிதெய்வயானைமனோகரனே (சு)

கந்தாசிவசண்முகா கதிதரும்காங்கேயநாதகுகா
வந்தாதரித்தருள்செய்பரங்கிரி வாழுங்குருபரனே (எ)

சண்டாளனென் றுமெனைப் பராக்காய்த் தள்ளாதேயுன்செங்கை
வேல்கண்டால்பழவினையு மணுகுமோகாருண்யசேவகனே (௮)

வேழ்விமலைச்சாரல் தனிலன்றுவேங்கைமரமாகி
தாழ்விலாவேடர்தனையே மாற்றியசண்முகசுந்தரனே (௯)

திருப்பரங்குன்றமதில் வருபவர்தீவினைதீர்த்திடுவாய்
வெறுப்பின்றியேமகிழ்ந்து அடியேன்வேண்டும்வரந்தருவாய் (௰)

சத்திவடிவேலாமுத்தய்யா சாந்தகுணசீலா
வெற்றிமயிலோலா மறைபுகழ் அத்தனருள்பாலா (௧௧)

சக்கரைக்காவடிகொண் டனுதினம் சன்னதிமுன்பாக
அக்கரையாகவரும் அன்பர்க்கு அருள்புரி ஆறுமுகா (௧௨)

ஆவின்பால்காவடியும் மச்சத்தா லமைந்திடுங்காவடியும்
ஆவலுடனேகொண்டேவருபவர்க் கானவரமருள்வாய் (௧௩)

உந்தன்பதமலரை யனுதினமுற்றதுணையெனவே
சிந்தனைசெய்சிறியேன் பலப்பிணி தீர்த்தருள்குகனே (௧௪).

வேறு சிந்து.

தந்ததன தானதன தந்ததன தானதன
தந்ததன தானதனதானன தனதந்த தனதானதன
தானன தனதானன தனதானன
தனதானதனதானதனதானன.

ஒண்டொடிமொழியும் வாழைப்பண்டடி
இனித்திடுங்கற்கண்டடி செண்டடி தனக்கும்பமே
வள்ளி உன்னையன்றியா ரெனக்குத் தம்பமே
மிகவம்படி இதுதெம்படி முகில்
உன்னிதந்தந்தாவழத்தின் கொம்படி. (௧)

காலடியிளஞ்சினைவொரலடி பசியவயறுலடி
மிஞ்சுதேவெகுமாலடிவேடக் கன்னியேவசனம்பசும்பாலடி
விழிசேவடி யிடைநூலடி யிளங்
சுந்தரமிளங்கமுகுபோலடி (௨)

கட்டினுநுதற்றிலதப் பொட்டினும்
இரண்டுவிழி வெட்டினுங் கிட்டியேமையலாகினேன்
நான் ஒட்டிலே பட்டசிட்டுப் போலாகினேன்

இதுநட்டனை வந்துதொட்டனை
சொர்ணபெட்டியே சன்னர்கரும்புகட்டியே (௯)

தேடுதே என்னுள்ளம் நொந்துவாடுதே
அகமையலாடுதே கூட்டடி குறவஞ்சியே
எனக்கீடெவர் சொல்லடி மோகமிஞ்சியே

எனைநத்தடி மணிமுத்தடி பாவி
சித்தசன்விளைத்த காமப்பித்தடி (௰)

காவடிச் சிந்து – முற்றிற்று.